பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தங்கம் தேயிலை
TANGAMM TEA
THE MEDICAL HALL

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ 2/.

கீல்ஸ் (KEELS) ஸ்தாபனத்தின் பதப்படுத்தப்பட்ட இறைச்சிவகைகள்
போன்: 22575
மெடிக்கல் ஹோல்
224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸு புரட்டாதி மீ 11 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 15 (27 - 09 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர் 194

விகாரைக்குச் சென்ற வழியில்

அமைச்சர் ஜயதிலகா நேற்று சுட்டுக்கொலை

மற்றும் இருவர் ஆபத்தான நிலையில்

கொழும்பு, செப்டெம்பர் 27

புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சர் லயனல் ஜயதிலக்கா (வயது 64) நேற்றுப்பிற்பகல் நான்கு மணியளவில் குளியாப்பிட்டியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

விகாரை ஒன்றுக்குச் சென்றுகொண்டிருந்தபோது மூன்று பேர் கொண்ட கோஷ்டி ஒன்று அமைச்சர் பயணம் செய்த கார் மீது சுட்டது. வீதியின் இரு மருங்குகளில் இருந்தும் அமைச்சர் மீது சுடப்பட்டது.

அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரியான ரிசர்வ் பொலீஸ் இன்ஸ்பெக்டர், கார்ச்சாரதி ஆகியோர் இச்சம்பவத்தின் போது படுகாயமடைந்தனர்.

படுகாயங்களுக்கு ஆளான அமைச்சர் உடனடியாக குளியாப்பிட்டி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

அங்கு அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் அமைச்சர் இறந்து விட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

கொலைஞர்கள் பாவித்த டிரக் ஒன்று பின்னர் நாரங்கலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சராக பதவி ஏற்கும் முன்னர் திரு. லயனல் ஜயதிலக கல்விச்சேவைகள் அமைச்சராகப் பணி புரிந்து வந்தார்.

இவர் குளியாப்பிட்டித்தொகுதி எம். பியும் ஆவார்.

காயமுற்றவர்கள் குருநாகல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் இதுவரை தென் இலங்கையில் 250 அரசு ஆதரவாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்களில் 2 பேர் மாவட்ட அமைச்சர்கள். ஐ. தே. க தலைவர், பொதுச் செயலாளர் ஆகியோரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். (ஒ-எ)

யுத்த நிறுத்தத்தை அமைதிப்படை மீறியதாகப் புலிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 27

இந்திய அமைதிப் படை யுத்த நிறுத்தத்தை மீறியதாகக் குற்றஞ்சாட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியற் பிரிவு 26-9-88 திகதியிட்டு வெளியிட்ட அந்த அறிக்கை விவரம் வருமாறு:

இந்திய அரசு தாமாகவே ஒரு தலைப்பட்சமாக பிரகடனப்படுத்திய யுத்த நிறுத்தத்தை கடந்த 17 9-88 ஆம் திகதி அன்று புன்னாலைக் கட்டுவனில் இரு அப்பாவிப் பொதுமக்களை சுட்டுப் படுகாயப் படுத்திய தன் மூலமும் புங்குடுதீவில் 22 9-88 ஆம் திகதியன்று எமது இயக்க முழு நேர உறுப்பினரான கண்ணனைச்சுட்டுப் படுகாயப்படுத்திக் கொண்டு சென்றதன் மூலமாகவும் அப்பட்டமாக மீறியுள்ளனர்.

இந்த யுத்த நிறுத்தத்தை நாம் எந்த வகையிலும் மீறவில்லை. இந்த யுத்த நிறுத்தம் ஒருதலைப்பட்சமாக இந்திய அரசால் அறிவிக்கப்பட்டிருந்தும் அதற்கு மதிப்பளித்து எமது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி வைத்திருந்தோம்.

ஆனால் யுத்த நிறுத்

(6ஆம் பக்கம் பார்க்க)

வெலிஓயா குடியேற்றம்:

டில்லி அதிகாரிகள் குழு முல்லைத்தீவுக்கு வருகிறது

வெலிஓயா குடியேற்றத்திட்டத்தைப் பார்வையிடுவதற்கு புதுடில்லியிலிருந்து அதிகாரிகள் குழு ஒன்று விரைவில் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்யவிருப்பதாக நம்பகரமான வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

வெலிஓயா திட்டத்தில் தற்போது குடியிருக்கும் சிங்கள மக்கள் ஏற்கனவே குடியமர்த்தப்பட்டவர்களா அல்லது அண்மையில் குடியமர்த்தப்பட்டவர்களா என்பது குறித்து பிரஸ்தாபக் குழு விரிவாக ஆராயவிருப்பதாகவும் அறியவருகிறது. (ஒ-ஐ-94)

வடபகுதியில் நேற்று பூரணதுக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், செப். 27

தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்று வடபகுதி எங்கும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிராமங்கள் தோறும் விரதங்களும், அன்னதானங்களும், சிரமதானங்களும் திலீபன் நினைவாக நேற்று நடைபெற்றன.

நல்லூரில் மாபெரும் அஞ்சலிக்கூட்டமும் அன்னதானமும் நடைபெற்றன.

நல்லூரில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொள்ளவென பல்வேறு பகுதிகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான பொது மக்களும் மாணவர்களும் ஊர்வலமாக வந்து சேர்ந்தனர்.

இதேவேளை யாழ் நகரில் நேற்று அனைத்துக்

(6ஆம் பக்கம் பார்க்க)

செயலகம் இன்று முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், செப் 27

யாழ்ப்பாணம் செயலகம் இன்று முதல் இயங்கும் என்று தெரியவருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாகச் சீர்குலைப்பு நடவடிக்கைகள் காரணமாக செயலகம் மாதத்தின் கடைசி வாரத்தில் மட்டும் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே

எனினும் இவ்வாரத்தில் நடைபெற்ற தியாகி திலீபனின் நினைவு நாட்களையொட்டி நேற்று வரை செயலகம் இயங்கவில்லை.

ஆனாலும் தொடர்ந்து வரும் இம்மாதத்தின் இறுதி நாட்கள் வரை செயலகம் இயங்கும். (ஒ-க)

திருமலையில் நேற்று ஹர்த்தால்

யாழ்ப்பாணம் செப் 27

திலீபனின் நினைவு தினமான நேற்று திருகோணமலையிலும் பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள் மூடப்பட்டிருந்தன, அரச அலுவலகங்கள், பாடசாலைகள் எதுவும் இயங்கவில்லை போக்குவரத்துக்களும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. (ஒ-9)

பர்மாவில்

இராணுவம் சுட்டு 22 பேர் மரணம்

ரங்கூன். செப். 27

ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது நேற்று பர்மா இராணுவம் சுட்டது.

அப்போது 22 பேர் உயிரிழந்தனர். (ஒ-எ)

யாழ் மாவட்டத்தில் தெரிவாகவுள்ள

கிராம சேவகர்களுக்கான நேர்முகப் பரீட்சை கொழும்பில்?

கொழும்பு செப் 27

யாழ் மாவட்டத்தில் கிராம சேவகர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடத்தப்படும் எனத் தெரியவருகிறது.

முன்னர், நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட திகதிகளில் நேர்முகப் பரீட்சையை நடத்த முடியவில்லை.

யாழ். செயலகமும் சிவில் நிர்வாகச் சீர்குலைப்பின் காரணமாக ஒழுங்காக இயங்க முடியாத நிலையில் இருப்பதாலேயே மேற்படி நேர்முகப் பரீட்சையை கொழும்பில் நடத்த திட்டமிடப்பட்டு வருவதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

இது இவ்வாறிருக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

27 - 09 - 1988
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.32 முதல் 12.02வரை
ராகுகாலம்:
03.02முதல் 04.32வரை

ஜப்பானின் உதவி

யாழ்ப்பாணம், செப் 27

ஜப்பான் அரசு இலங்கைக்கு பத்து லட்சம் யென்னை உதவியாக வழங்கியுள்ளது.

இந்தப்பணம் இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது

இந்தப்பணம் இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் வடக்கு, கிழக்குப் பகுதி அகதிகள் நிவாரண புனர்வாழ்வுப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது (ஒ-9)

முச்சந்தி முரளி



அப்பிடியெண்டா தெற்கிலை நாலு படையளாலும் நிலைமையைச் சமாளிக்க முடியயில்லையோ...? ஐஞ்சாம் படையான ஊர்காவலையும் அங்கை கூப்பிடுறதன் காரணம் அதுதானே பின்னை...!

மாங்குளம் ஊர்காவலர் தென்பகுதிக்கு மாற்றம்

மாங்குளம், செப் 27

மாங்குளத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு உதவியாக இருந்து வந்த ஊர்காவல் படையினர் அனைவரும் அவசர அவசரமாக தென் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளையில் மாங்குளம் பொலீஸ் நிலையத்திலிருந்து அடுத்தமாதம் சிங்களப் பொலிஸார் பத்துபேர் தென்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்குப் பதிலாக தமிழ் பொலிஸார் பத்துப்பேர் மாங்குளம் பொலீஸ் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். என்றும் அறியவருகிறது. (ஒ-ஐ 94)

திலீபனுக்காக இரத்ததானம்

யாழ்ப்பாணம், செப். 27

தியாகி திலீபனின் நினைவையொட்டி நேற்று சிறுப்பிட்டி கலைவாணி சனசமூக நிலையத்தினர் இரத்த தானநிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த இரத்த தானத்தில் ஏராளமான ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர்.

ஒரு சில வயோதிபர்களும் இரத்த தானத்திற்கு முன் வந்தனர். ஆயினும்

(6ம் பக்கம் பார்க்க)

மாணவர் சமுதாயம்

பேனாவுக்குப் பதில் ஆயுதம் ஏந்தும் நிலையை உருவாக்காதீர்

திலீபன் நினைவுக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 27

தமிழ் மக்களின் பிரச்சினையைத்தீர்த்து வைக்க வேண்டியது இலங்கை—இந்திய அரசுகளின் கடமையாகும். அந்தக் கடமையிலிருந்து தவறுவதன் மூலம் பேனா பிடிக்கும் மாணவர் சமுதாயம் துப்பாக்கி ஏந்தும் துர்ப்பாக்கிய நிலை உருவாகும். அந்நிலைமை ஏற்படாது எமது பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும்.

இவ்வாறு நேற்று வல்வெட்டித்துறையில் நடைபெற்ற தியாகி திலீபனின் அஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றிய வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழுவின் வல்வெட்டித்துறைப்பிரதேசப் பொறுப்பாளர் திரு. தே பிரதீபன் தமது உரையில் குறிப்பிட்டார்.

தியாகி திலீபனின்முதலாம் ஆண்டு நினைவை ஒட்டி நேற்று வல்வெட்டித்துறை நெடியகாட்டுப் பிள்ளையார் கோவிலில் மாபெரும் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இதற்கு முன்னர் காலை 10 மணியளவில் வல்வை முத்துமாரியம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

லட்சியத்தை வென்றெடுப்பதே திலீபனுக்குச் செலுத்தும் அஞ்சலி

நல்லூர்க் கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், செப். 27

திலீபனின் இலட்சியம் மக்கள் புரட்சி மூலம் வென்றெடுக்கப்பட வேண்டும் அந்த இலட்சியம் வென்றெடுக்கப்பட்டால் தான் திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதாக அமையும்.

யாழ் பல்கலைக்கழக மாணவ பிரதிநிதி எஸ். ஏ வின்ஸ்லஸ் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று நண்பகல் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் தியாகி திலீபனின் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது வடக்கு-கிழக்குப் பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழுவின் தலைவர் திரு. எஸ். அருணாசலம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பேசிய பல்கலைக்கழக மாணவ பிரதிநிதி மேலும் கூறியதாவது;

யாழ்ப்பாணக் கோட்டையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் திலீபன் உரை நிகழ்த்துகையில் "கோட்டையில் நமது கொடிபறக்க வேண்டும்" என்றதனது

(6 ஆம் பக்கம் பார்க்க)

தியாக தீப தூபி திறப்பு

யாழ்ப்பாணம் செப் 27

தியாகி திலீபனின் நினைவாக "தியாகதீப தூபி" ஒன்று நல்லூர்- பருத்தித்துறை வீதியில் உள்ள இந்து கலாசார மண்டபத்தின் பின்பகுதியில் யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி.வி.கே. சிவஞானத்தின் ஏற்பாட்டில் நிறுவப்பட்டு வருகிறது.

இந்த தூபி நாளை பிற்பகல் 3 30 மணிக்கு திறந்து வைக்கப்பட உள்ளது. (அ-9)

நேற்றுக்கிடைத்த தங்கப்பதக்கங்கள்

நேற்று நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்கா, கிழக்கு ஜேர்மனி, சோவியத் யூனியன் தலா இரண்டு தங்கப்பதக்கங்களைப் பெற்றன.

மொரொக்கோவும் கென்யாவும் தலா ஒரு தங்கப்பதக்கத்தைப் பெற்றன. (ஒ-எ)

நல்லூர்க் கூட்டத்துக்கு ஊர்வலமாக வந்த மக்கள்

யாழ்ப்பாணம் செப் 27

நல்லூரில் நேற்று நடைபெற்ற தியாகி திலீபன் நினைவுதினக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் ஊர்வலமாக நல்லூர் வந்தடைந்தார்கள்

அரியாலை பிரசைகள் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த ஊர்வலம் தபாற் கட்டைச் சந்தியில் இருந்து ஆரம்பமாகியது

தபாற்கட்டைச் சந்தியில் ஒன்று கூடிய பொது மக்கள் அங்கு தளபதி விக்ரர் சிலைக்கு மாலை அணிவித்து அதன் பின்னர் நல்லூரை நோக்கி ஊர்வலமாகப் புறப்பட்டனர்.

"திலீபன் பாதை எங்கள் பாதை" "மக்கள் புரட்சி வெடிக்கட்டும்" என்ற கோஷங்களை எழுப்பியபடி கண்டிவீதி, கச்சேரி— நல்லூர் வீதி, நாவலர் வீதி, செட்டித் தெரு என்பவற்றினூடாக ஊர்வலம் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலை அடைந்தது

நாவலடி, பூம்புகார், கிழக்கு அரியாலை, மணிப்புரி, உதயபுரம், வசந்தபுரம் பாஷையூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் இந்த ஊர்வலத்தில் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். (ஒ-க-9-10-5)

யாழ்நகர் இன்று வழமைக்குத் திரும்பும்

யாழ்ப்பாணம், செப் 27

யாழ்ப்பாணம் இன்று வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தியாகி திலீபனின் முதலாண்டு நினைவு நாட்களை முன்னிட்டு கடந்த இருவாரங்களாக அன்றாட நடவடிக்கைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் முடங்கிக் கிடந்தன.

அரச அலுவலங்கள் மூடப்பட்டிருந்ததுடன்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★சின்னஞ் சிறு விளம்பரம்★

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Honda Chaly 50CC Motorcycles (பல நிறங்களில்) விற்பனைக்கு உண்டு தொடர்பு:- சதாஸ் போட்டோர்ஸ் அன் ஹார்ட்வயார்ஸ். 56/2, ஸ்ரான்லி வீதி, (இலங்கை வங்கி அருகாமை) யாழ்ப்பாணம். (6764)

ஏழாலை கெற்கு சூராவத்தை ரோட், சுன்னுகத்தில் முன்னர் கந்தன் சண்முகநாதனுக்கும் பெண் சரோஜினிக்கும் சொந்தமாக இருந்துதற்போது வே. விஜயகுமாருக்குச் சொந்தமான இறை ''மணிசிந்தாக் கலட்டி'' என்னும் 3 பரப்புக்காணியும்அதற்குள் அமைந்த இரண்டுஅறைகள் கொண்ட வீடும் கிணறும், தோட்டம் செய்யக் கூடியதுமான காணி விற்பனைக்குண்டு. தொடர்பு; வே.விஜயகுமார், 53/6 அன்ன சத்திரலேன், கந்தர்மடம். (C297)

திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards),திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C124)

கோழிக்குஞ்சு விநியோகம்

ஒருநாள் Hy - Line Lohmann Golden Comet, பிறவுண் வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் 27 – 09 – 88, 28-9-88 இல் விநியோகிக்கப்படும். விபரங்களுக்கு R. S. K. Farm முருகபதி உடுவில், (2) குபேரன் ஸ்ரோஸ் கொக்குவில் சந்தி, கொக்குவில். (6772)

கோழிக்குஞ்சு விநியோகம்

2 கிழமைக்கு முன் முழுப் பணமும் செலுத்தி 200 குஞ்சுகளுக்கு மேல் எடுப்பவர்களுக்கு Hy Line வெள்ளைப் பேடு 12/75, Golden Comet Lohmann Prima, பிறவுண் பேடு 13/-, பிறவுண் சேவல் 3/-, கறுப்பு சேவல் 6/75, செற்ரு சேவல் 6/50, லோமன் வெள்ளை 15/75 விபரங்களுக்கு: R. S. K. Farm முருகபதி உடுவில், குபேரன் ஸ்ரோரஸ், கொக்குவில் சந்தி, கொக்குவில். (6771)

(ஒவ்வொரு வாரமும் Lohmann) பிறவுண் பேட்டுக்குஞ்சு, சேவற் குஞ்சு, (பிலிமத்) கறுப்புப்புள்ளி சேவற்குஞ்சு குறைந்த விலைக்கு விற்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். No: 9 கந்தையா லேன், (சூராவத்தை ரோட், சுன்னுகம். (புகையிரத நிலையத்துக்கு அருகாமையில்) [6779]

திறி ஏக்கர் பாம் ஒருநாள் Hyline வெள்ளை நிற பேட்டுக் கோழிக்குஞ்சுகள் இம் மாதம் 28 ஆம் திகதியிலிருந்து எமது சுஜேரா ஸ்தாபனத்தில் விற்பனையாகும். பதிவு செய்தவர்களும், செய்யாதவர்களும் எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம். முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது தொடர்பு: சுஜேரா 21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (C/z/7)

ஒரு வாரத்திற்கு முன்னர் முழுப்பணமும் செலுத்தி 100 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு கீழ் வரும்விலைகளில் கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். பிறவுண்சேவல் குஞ்சு 3 00, கறுப்பு சேவல் குஞ்சு 6. 75. சற்குணராஜா & பிறதர் பிரபபடி லேன், கொக்குவில். (6761)

சர்வதேச செஞ்சிலுவைக் கவுன்ஸிலின் பிரதிநிதி அக்-8இல் யாழ். வருகிறார்

ஒரு வாரகாலம் தங்கியிருந்து விவரங்களைச் சேகரிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், செப். 27

தமிழ்மக்களின் வாழ்க்கைப்பிரச்சினைகள், சமூக,பொருளாதாரநிலைமைகள் ஆகியவற்றை ஆராய்ந்து விரிவான அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காக ஜெனிவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைக் கவுன்சிலின் பெண்பிரதிநிதி ஒருவர் அடுத்தமாதம் (அக்டோபர்) எட்டாம்திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

இந்தப் பிரதிநிதி யாழ்ப்பாணத்தில் ஒரு வாரகாலம் தங்கியிருந்து யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து பல தரப்பட்ட மக்களையும் நேரடியாகச் சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகளையும். சமூக, பொருளாதார நிலைமைகளையும் அறிந்துகொள்வார்.

இதற்குப்பிறகு இவர் ஏனைய தமிழ்ப் பகுதிகளுக்கும் விஜயம்செய்து அங்குள்ள தமிழ் மக்களையும் சந்தித்து விவரங்களைச் சேகரிப்பார்.

ஜெனீவாவில் நடைபெறும் வருடாந்த மாநாட்டில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

பிரஸ்தாப மாநாட்டில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபின் அது உலகிலுள்ள சகல நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படும். (இ-க-ஜ)

நான்கு நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்27

தேசிய கலை இலக்கியப் பேரவை நான்கு நூல்களை வெளியிட்டு வைக்க உள்ளது.

முருகையன் எழுதிய ''இன்றைய உலகில் இலக்கியம் '

சி. சிவசேகரத்தின் ''செப்பனிட்ட படிமங்கள்'' [கவிதைகள்]

ந. இரவீந்திரனின் ''பாரதியின் மெய்ஞ்ஞானம்''

க. தணிகாசலத்தின் ''பிரம்படி'' [சிறுகதைகள்] ஆகியவையே இந்த நூல்கள் ஆகும்.

இந்த நூல்களின் அறிமுக அரங்கு நாளை 28 ஆம் திகதி புதன் கிழமை 2.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

விழாவுக்கு கலாநிதி இ. பாலசுந்தரம் தலைமை வகிப்பார்.

திருவாளர்கள் சி. பற்குணம், சோ. தேவராஜா, இ. சிவானந்தன், வி. பி. சிவநாதன் ஆகியோர் அறிமுக உரை நிகழ்த்துவர். (இ-9)

ஆயுதம் ஏந்தும்

வரலாறு தொடராது பார்ப்பது இந்திய அரசின் பொறுப்பு

அஞ்சலிக் கூட்டத்தில் உரை

முன்னர் யாழ் செயலகத்தின் முன் தமிழ் மக்கள் சாத்வீகப் போராட்டத்தை நடத்திய போது அப்போதைய அரசு அதனை ஆயுத முனையில் நசுக்கியது. இதனால் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நேர்ந்தது. அந்த வரலாறு மேலும் தொடராது நடந்துகொள்ள வேண்டியது இந்திய அரசின் பொறுப்பு.

சனிக்கிழமை குருநகர் புனித யாகப்பர் ஆலய வளவில் நடைபெற்ற உண்ணுவிரதத்தை அடுத்துதியாகிதிலீபனின் அஞ்சலிக் கூட்டத்தில் பண்டிதர் கணபதிப்பிள்ளை இவ்வாறு உரையாற்றினார்.

அஞ்சலிக் கூட்டம் சென். ஹேம்ஸ் மகா வித்தியாலய அதிபர் அஸ்ரனிஸ்லோஸ் தலைமையில் நடைபெற்றது.

தலைமையுரையில் திரு. ஸ்ரனிஸ்லோஸ் தெரிவித்ததாவது;-

''மத்தியஸ்தம் செலுத்த வந்தவர்கள் ஏதோவொரு ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டார்கள்.

அதே வேளை நாட்டின் உரிமைக்காகப் போராடிக்கொண்டிருந்த போராளிகள் புறக்கணிக்கப்பட்டதே இங்கேஇன்னமும் அமைதி தோன்றாமைக்குக் காரணமாக இருந்துகொண்டிருக்கிறது''

இப்படி அவர் கூறினார்.

தியாகி திலீபனின் பெரிய அளவிலான திருவுருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைத்து மலர் மாலையும் அணிவித்த திலீபனின் சகோதரர் திரு. இளங்கோ தனது அஞ்சலியுரையில்,

''ஒரு வருடத்திற்கு முன்பாக திலீபன் உண்ணுவிரதமிருந்து போராடிக் கொண்டிருந்த சமயம் சொன்னான். மக்கள் எழுச்சி பெறவேண்டும்; அப்பொழுதுதான் சுதந்திர தமிழீழம் மலரும்'' என்று-

இப்பொழுது மக்கள் எழுச்சி அடைந்து விட்டார்கள். எனவே தமிழீழம் மலரும் காலம் தூரத்தில் இல்லை'' இவ்வாறு அவர் கூறினார்.

அஞ்சலிக் கூட்டத்தின் ஆரம்பத்தில் போராட்டத்தில் உயிர் நீத்த அனைத்துதியாகிகளுக்கும் இருநிமிடம் மௌனஞ்சலி செலுத்தப்பட்டது.

திரைநீக்கம் செய்யப்பட்ட தியாகி திலீபனது திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு குருநகர், சனசமூகநிலைய முன்றலில் 31 மீனவர்கள் நினைவாக நிறுவப்பட்ட தூபி மேடையில் வைக்கப் பட்டது. (ச- 51)

கல்வி வளர்ச்சியை அதிபர்களாகிய நாம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும்

நீர்வேலி கொத்தணி அதிபர் உரை

பலாலி செப் 27

எமது கொத்தணிப் பகுதியின் கல்வி வளர்ச்சி, கல்வி வளப்பயன்பாடு - புதிய வளங்களினைத் தேடிக் கொள்ளல் என்பவற்றை அதிபர்களாகிய நாம் இணைந்து திட்டமிட்டு தனித்தும், ஒருமித்து செயற்படுத்த வேண்டும்.

இதற்காக அதிகார மட்டத்தில் இருந்து நான் உங்களைப் பார்ப்பதோ அன்றி அதிகாரியாக நினைத்து நீங்கள் என்னை நோக்குவதோ தவிர்க்கப்பட வேண்டும் சரியான ஆலோசனைகள் உங்களிடமிருந்தும் ஆசிரியர்களிடம் இருந்தும் வரும் போதுதான் நான் எனது கடமையைச் சரியாகச் செய்யலாம் என்பதனைப் பரிபூரணமாக நான் நம்புகின்றேன்.

இவ்வாறு அண்மையில் பதவி உயர்வு பெற்று நீர்வேலி கொத்தணி அதிபராகப் பதவி ஏற்று கொத்தணிப் பகுதிப் பாடசாலைகளின் அதிபர்கள் மத்தியில் உரையாற்றிய திரு. அ. கனகசுந்தரம் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:

மிகுந்த கஷ்டமான சூழ்நிலையிலும் கடமையுணர்ச்சியுடன் சேவை மனப்பான்மை மேலோங்க சேவையாற்றிவரும் பல அதிபர்களையும், ஆசிரியர்களையும் நான் காண்கின்றபோதுஉளப் பூரிப்படைகின்றேன்.

எங்கள் முன் மாபெரும் கடமை ஒன்று தற்போதுள்ள சகல வழிகளாலும் எமது அன்புச் செல்வங்களான மாணவர்களின் உள உடைவுகளை மாற்றவும், உடல் சிராக்கத்தினையும் அவர்கள் வாழுகின்ற சுற்றுடல் வளர்ச்சியினையும் மேலோங்க எங்கள்பணியினை நாம் அர்ப்பணிக்க வேண்டும்.

சகல கொத்தணிகளினது வளர்ச்சியினையும் இணைத்து எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்காகத் திட்டமிடும் கல்வி அதிகாரிகளுக்கு எமது பரிபூரண ஒத்துழைப்பினைவழங்குவோம் என்றார். (ஓ-119)

''நடனம் கூட ஒருவித தேகப் பயிற்சியே''

விளையாட்டுப் போட்டியில் உரை

மானிப்பாய் மகளிரின் கள்ளமற்ற உள்ளம், தூய்மை ஆகியவை தான் இன்றைய விளையாட்டுக்கள் எவ்வித தடையுமின்றி நடைபெறக் காரணமாக அமைந்தன. நடனம் கூட ஒருவித தேகப் பயிற்சியே. தேகப்பயிற்சி ஆசிரியர் இல்லாத நிலையில்கூட விஞ்ஞான ஆசிரியை திருமதி எம். ரி. ஞானப்பிரகாசம் கலாசார நிகழ்ச்சியாகிய நடனத்தை விளையாட்டாக்கி தமது திறமையைக் காட்டியதும் பாராட்டக்கூடியது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாண கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு.கே. சோமசுந்தரம்.

மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் அவர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சரோஜினி கல்யாணசுந்தரேசன் தலைமையில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

அதிபர் தமது வரவேற்புரையின் போது; அனைத்துலக நாடுகளையும் இணைக்கவல்ல சாதனம் விளையாட்டுப் போட்டியே.

விசேஷ விருந்தினராகக் கலந்துகொண்ட மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் உரையாற்றுகையில்; மானிப்பாய் மகளிர் கல்லூரி சகல துறைகளிலும் வளர்ச்சி அடைந்து வருகின்றது. இவ்வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ள கல்லூரியின் புதிய அதிபரும் அவரது உதவி ஆசிரியர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள் என்றார்.

போட்டி முடிவில் ஜமுனு இல்லம், காவேரி இல்லம், கங்கா இல்லம் ஆகியவை முறையே வெற்றியீட்டின.

திருமதி தையல்நாயகி சோமசுந்தரம் பரிசுகள் வழங்கினார். (இ- 90)

தியாகி திலீபனுக்கு கண்ணீர் அஞ்சலி!

தியாக தீபம் இ. திலீபன்

(பார்த்திபன்)

தியாகத்தின் தோற்றம்: 29 - 11 - 1963

தியாகத்தின் மறைவு: 26 - 09 - 1987

தமிழர் தமைக் காப்பதற்காய்
தமிழ் மண்ணில் அவதரித்தாய்
அவனியிற்புகழ் பெறுவதற்காய்
அன்று விரதம் நீ இருந்தாய்
புவனியில் உனைப்போல் தியாகி
இனியும் தோன்றப் போமோ!
தரணியில் உன் புகழ் நிலைக்கும்
திலிபனே! வாழ்க நீ என்றும்!

(6829) [illegible]ளி மக்கள், பளை.

இதய அஞ்சலி

தியாகி திலீபனுக்கு எங்கள் இதய அஞ்சலி

முருகமூர்த்தி என வழங்கும்
வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்கப்
பிள்ளையார் கோவில்
இளைஞர் மன்றம்.

(6830)

இன்று 27-9-88 முதல் தெய்வேந்திரா வெண்திரையில் (சாவகச்சேரி)

தினசரி—காலை 10-30 பி. ப 2-30க்கு மட்டும்

மோகன், நதியா, சுஜாதா, செந்தில், விஜயகுமார் நடித்த

உயிரே உனக்காக!

(கலர்)

சிறந்த காதல் காவியம் (6561)

மின்சாரம் தாக்கி மரணம்

மானிப்பாய், செப் 27 மானிப்பாயிலுள்ள உச்சியோடை கிராமத்தைச் சேர்ந்த செல்வன் நடராசா சிவகுமார் (வயது 15) என்பவர் மின்சாரம் தாக்கி மரணமானார். (இ-90)

திருமலையில் பாதிக்கப்பட்ட

மீனவர் குடும்பங்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

திருகோணமலை செப் 27 இந்திய செஞ்சிலுவைச் சங்கம் சுமார் 20 தொன் எடையுள்ள உணவு வகைகளை திருகோணமலை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு ஊடாக பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு வழங்கி உள்ளது.

இது தவிர பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு வழங்குவதற்காக 600 லீற்றர் மண்ணெண்ணெயையும் அது வழங்கி உள்ளது.

அரிசி, பருப்பு, சீனி, பால்மா அடங்கிய இந்த பொருள்கள் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

குச்சவெளியில் சுமார் 550 மீனவக்குடும்பங்கள் சாம்பல்தீவு, சல்லி ஆகிய பகுதிகளில் 200 குடும்பங்கள், கிண்ணியாவில் 800 குடும்பங்கள் ஈச்சிலம்பத்தை— வெருகல் பகுதியில் சுமார் 1000 குடும்பங்களுக்கு இந்தப் பொருள்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாக திருமலை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் டாக்டர். கே. விக்னேஸ்வரன் கூறினார்.

மண்ணெண்ணெய் வெருகல்— ஈச்சிலம்பத்தைப் பகுதிகளிலுள்ள மீனவக் குடும்பங்களுக்கே வழங்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்திய செஞ்சிலுவைச் சங்கம் அன்பளிப்புச் செய்த 8 தொன் உணவுப் பொருள்கள் திரியாய், கல்லம்பத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட சுமார் 250 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-150)

மண்டைதீவு விவசாயிகளுக்கு விதை நெல் வழங்குக

மண்டைதீவு, செப் 27 விவசாயிகளுக்கு இம்முறை விதைநெல் வழங்கி உதவுமாறு மண்டைதீவு விவசாயிகள் மகஜர் மூலம் வேலணை பெரும்பாக உத்தியோகத்தருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

கடந்தவருடம்போக்குவாத்து சிர்குலைவு காரணமாக அநுராதபுர நெல் களஞ்சியத்திலிருந்து விதை நெல் கொண்டு வந்து விநியோகிக்கப்படவில்லை.

இதனால் அனேக விவசாயிகள் வெளியிடங்களில் தரம் குறைந்த விதைநெல்லை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இராணுவ நடவடிக்கைகளினால் இப் பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கு வழங்கப்படும் நஷ்ட ஈட்டுப் பணத்தை உடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அம் மஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-88)

கட்டட வேலைகள் ஆரம்பம்

தாளையடி செப். 27 கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் பல வருடங்களாக கட்டி முடிக்கப்படாமல் அரைகுறையாகவிருந்த கட்டட வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச-144)

நற்சமூக நடுநிலையம்

சமூக தலைமைத்துவம் பயிற்சி நெறி

சமூக மேம்பாட்டு நோக்குடையோர் தம் பணிகளை மேலும் திறம்பட ஆற்ற உதவும் முகமாக இந்நிலையத்தினால் ஒரு பயிற்சி நெறி தமிழில் மேற்படி நிலையத்தில் எதிர் வரும் ஒக்ரோபர் 88 முதல் ஏப்ரல் 89 வரை நடத்தப்படவிருக்கின்றது. இப்பயிற்சி நெறி முற்றிலும் இலவசமாக நடத்தப்படும். பயிற்சி நெறியின் இறுதியில் முழுமையாகப் பங்குபற்றியவர்கட்கு சான்றிதழ் வழங்கப்படும். கிராமிய மட்டத்தில் சமய சமூக, கலாசார, கூட்டுறவு அரசியல் ஆகிய துறைகளில் உழைக்கும் அல்லது ஊக்குவிக்கும் பொது நல ஆர்வமுடையோர் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தில் சுயவிபரங்களுடனும், சமூக ஈடுபாடுகள் பற்றிய விபரங்களுடனும் தயாரிக்கப்பட்டு ''செயலர், நற்சமூக நடுநிலையம், 115, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு 10- 10 -88ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பயிற்சி நெறி பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும். 1. சமூகவியல், 2. கலாசாரம் 3. அரசியல், 4. பொருளியல் 5. கூட்டுறவு 6. சமயங்களின் மறையியல், 7. அபிவிருத்தி, 8. புனரமைப்பு, 9. முதியோர் கல்வி, 10. ஆலோசனை வழங்கல், 11. சமூக உருவாக்கம், 12. குடும்பம் முதலியன.

விரிவுரைகளில் ஒழுங்காகப் பங்குபற்றி பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்யக் கூடியவர்களான 25-30 பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கட்படுவர்.

விரிவுரைகள் வாராந்தம் 2 நாட்கள் தலா ஒவ்வொரு மணித்தியாலம் வீதம் மொத்தமாக ஏறத்தாழ 50 மணித்தியாலங்கள் வழங்கப்படும். விரிவுரைகள் பெரும்பாலும் வார விடுமுறை தினங்களிலேயே ஒழுங்கு செய்யப்படும்.

அ. சந்தியாப்பிள்ளை
செயலர்.

நற்சமூக நடு நிலையம்,
115, 4ம், குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்,
24- 09 – 1988

(6614)

திலீபனின்

அஹிம்சை வாரத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப். 27 தியாகிதிலீபனின் முதலாம்வருட நினைவை ஒட்டி அனுஷ்டிக்கப்படும் அஹிம்சை வாரம் எல்லாப்பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டது.

பல பொது ஸ்தாபன அரச ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து திலீபனுக்குத் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

நல்லூரில்

நல்லூரில்நடைபெற்று வந்த உண்ணாவிரதத்தில் கடந்த 23 ஆம் திகதி நல்லூர் ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

நாவற்குழியில்

கடந்த 15ஆம் திகதி முதல் நாவற்குழியில் பல பகுதிகளிலும் தினமும் பிற்பகல் 4 மணிக்கு பிரார்த்தனைகளும் அஞ்சலிக்கூட்டங்களும் நடைபெற்றன.

பூநகரியில்

கடந்த 19ஆம் திகதி பூநகரி வாடியடி முனியப்பர் ஆலயத்தில் விசேடபூஜையும், அன்னதானமும் அப்பகுதி பிரஜைகள் குழுத் தலைவர் தலைமையில் நடைபெற்றன.

பண்டத்தரிப்பில்

கடந்த வெள்ளிக்கிழமை பண்டத்தரிப்பு பட்டின சபைக்கு உட்பட்ட பகுதியெங்கும் விசேஷ ஆராதனைகளும் பூசைகளும் நடத்தப்பட்டன. பண்டத்தரிப்பு சந்தை மைதானத்தில் உண்ணா விரதமொன்றும் மேற்கொள்ளப் பட்டது. (இ-120)

வடமராட்சியில்

வடமராட்சியில் பல பகுதிகளிலும் கறுப்புக் கொடிகளும், புலிக் கொடிகளும், வாழை, கமுகு மரங்களும் கட்டப்பட்டு முக்கிய ஆலயங்களில பூஜை வழிபாடுகளும், உண்ணாவிரதங்களும் மேற்கொள்ளப்பட்டன. (இ-160)

காரைநகரில்

காரைநகர் வாரிவளவு பிள்ளையார் ஆலய முன்றலில் கடந்த 20 ஆம் திதி உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. புலிக்கொடியும் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டிருந்தது (இ-73)

வட்டுக்கோட்டையில்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் கடந்த புதன்கிழமை முழுவதும் பிரஸ்தாப பாடசாலை முன்றலில் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர். (இ-29)

காங்கேசன்துறையில்

காங்கேசன் துறையில் பல பகுதிகளிலும் கறுப்புக்கொடிகளும், புலிக்கொடிகளும் பறக்க விடப்பட்டன.

நடேஸ்வராக் கல்லூரிச் சந்தியில் திலீபன்ன் படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருவதுடன் கடந்த 23 ஆம் திகதி காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரியில் அஞ்சலிக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

தெல்லிப்பழையில்

மாவிட்டபுரம் தெல்லிப்பழைப் பகுதிகளிலும் திலீபனுக்குப் பல வழிகளில் அஞ்சலிகள் செலுத்தப்பட்டன.

புதுக்குடியிருப்பில்

புதுக்குடியிருப்பு 7 ஆம் வட்டாரத்தில் திலீபனுக்கு நினைவுத்தூபி ஒன்று கட்டப்பட்டுவருகின்றது. (இ-126(

குருநகரில்

மாணவர் ஒருங்கிணைப்புக் குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை குருநகர் தண்ணீர் தாங்கிச் சந்தியில் உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொண்டனர். இந்த உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டவர்களுக்கு அமைதிப் படையினர் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர். 24ஆம் திகதி சனிக்கிழமை குருநகர் புனித யாகப்பர் ஆலய முன்றலிலும் உண்ணாவிரதம் மேற்கொள்ளபபட்டது. உண்ணாவிரதமுதலில் அஞ்சலிக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. (இ-51)

மண்டைதீவில்

மண்டைதீவு சிறுப்பும் மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது. (இ-88)

தேவிபுரத்தில்

தேவிபுரம் முருகன் கோவிலிலும் மற்றும் நடனமிட்டான் பிள்ளையார்கோவிலிலும் பூஜை வழிபாடுகளும் அன்னதானமும் நடைபெற்றன.

ஒட்டுசுட்டானில்

ஒட்டுசுட்டான் பகுதியின் பல இடங்களிலும் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது,

தாளையடியில்

வடமராட்சி கிழக்கின் பல பகுதிகளிலும் கடந்த வெள்ளிக்கிழமை ஹர்த்தாலும் உண்ணாவிரதமும் அனுஷ்டிக்கப்பட்டன. (இ-144)

இளவாலையில்

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் கடந்த வெள்ளியன்று அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தை அந்தப் பாடசாலையின் உயர்நிலை மாணவர் மன்றத்தினர் ஒழுங்குசெய்திருந்தனர். (-9)

திருப்பூரில்

தியாகதீபம் திலீபனின் தியாகதினத்தையொட்டி மயிலிட்டி திருப்பூரில் மாபெரும் உண்ணாவிரதமும் முடிவில அன்னதானமும் இடம்பெற்றது

திருப்பூர் ஒன்றிய முத்துமாரிஅம்பாள் ஆலயத்தின்முன்றலில் நடைபெற்ற உண்ணாவிரதத்தைத் திரு. இ. வேலும் [illegible] ஆரம்பித்து [illegible] (ச-68)

கிளிநொச்சி
தெங்கு பனம் பொருள் உற்பத்தி
விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்.

பதவி வெற்றிடம்

பொதுமுகாமையாளர் தரம் III

தகைமைகள்:

அ. கூட்டுறவுப் பயிற்சி பெற்றுள்ள பட்டதாரி.

அல்லது

ஆ. 3 வருட கால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர் தராதரப் பத்திரம்.

அல்லது

இ. 5 வருட கால அனுபவம் பொருந்திய முன்னை நாட் கூட்டுறவுப் பரிசோதகர்.

அல்லது

ஈ. ரூபா 20, 00, 000/- இனை வருடாந்த மொத்த விற்பனையாகக் கொண்ட வியாபாரத் தாபனம் ஒன்றின் மேல்முகாமைப் பதவியில் 5 வருட கால அனுபவம் உடையவர்.

அல்லது

உ. முகாமையாளர் தரத்திற்குக் குறையாத தரத்தில் 2 வருட அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு 1981 ஆம் ஆண்டுச்சட்டபிரகாரம் 10 ஆம் சம்பளத் திட்டத்தில் உள்ளஒருவர். அல்லது 11 ஆம் சம்பளத்திட்டத்தில் 4 வருட கால சேவையுள்ள ஒருவர்.

சம்பள அளவுத் திட்டம்:
400 — 720
20 × 10 — 30 × 4

சுற்று நிருபங்கட்கமைய சம்பளத் திட்டம் மாற்றி அமைக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 07 – 10 – 1988

நேர்முகப் பரீட்சை- 12 – 10 – 1988

விண்ணப்பதாரர்கள் சகல ஆவணங்களுடனும் 12-10-1988 இல் நேர்முகப் பரீட்சைக்கு காலை 10.00 மணிக்கு சமுகமளிக்கவேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் '' தலைவர் '' தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி. என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும்.

தலைவர்,
தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்.
கிளிநொச்சி.

(C/278)

✝
J. M. J.

உங்கள் பயண அமைப்பாளர்

எஸ்.பி.அன்ரன் வழங்கும்
வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜெர்மனி ★ இத்தாலி
★ சுவிஸ் ★ பிரான்ஸ் ★ அமெரிக்கா

ஷெ நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். ஒவ்வொரு வாரமும் எமது குழுக்கள் இறைவன் நல்லருளுடன் ஷெ நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு வருகின்றன.

நீங்கள் விரும்பும் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

எனவே விபரங்களுக்கு உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

1. கிரேக்க கப்பல் வேலை வாய்ப்புகள்

பிரபல கிரேக்க கப்பல் கம்பனியைச் சேர்ந்த பெரிய கப்பல்களில் பணிபுரியப் பின்வருவோர் உடனடியாகத் தேவை.

Captain – Chief Officer
Chief Engineer - 2 nd Engineer
Oilers - Radio Officers
A-B

அனுபவமும் தேர்ச்சியும் உடையவர்களுக்கு உடனடி வாய்ப்பு வழங்கப்படும்

2. செல்வம்கொழிக்கும் குவைத் நாட்டில்

ஆஸ்பத்திரி, பாடசாலை மற்றும் பொது அலுவலகங்களில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக CLEANERS ஆகப் பணியாற்றுவதற்கு விரும்புகிறீர்களா?

சம்பளம்: 35 — 40 டினார்கள் குவைத்

உணவு, உறைவிடம் இலவசம்.

குவைற் றைவர்

H. V Drivers
L. V. Drivers வீட்டுச்சாரதிகள்

குவைத் கப்பல் வேலை வாய்ப்புகள்

3. சவூதி அரேபியா

சவூதி அரேபியாவில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் CLEANERS உடனடியாகத் தேவை

சம்பளம்: 450 SR

ஓவர்டைம், உணவு, இருப்பிடம் இலவசம்,

4. கனடா, லண்டன், பிரான்ஸ், கிறீஸ், சைப்ரஸ், லெபனான், ஜோர்தான், சிங்கப்பூர், அபுதாபி, ஓமான்

வீட்டு வேலைப் பணிப்பெண்கள்

ஓரளவு ஆங்கில அறிவுடைய பெண்களுக்கு ஷெ நாடுகளிலும் கண்ணியமான குடும்பங்களில் வீட்டு வேலை வாய்ப்பு. விசா முதலிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும் சகல விபரங்களுக்கும் உடனே தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறேன்.

உங்கள் பயண அமைப்பாளர்:

S.P. ANTON

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

(C 286)

வரி வசூலிப்போர் மக்கள் சலுகைகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்

சுன்னாகம் செப் 27

"மக்களிடம் வரி வசூலிப்போர் வரியைச் செலுத்தும் மக்களுக்கு வரிக்குரிய சலுகைகள்- அனுகூலங்கள் வழங்கப்பட்டனவா என்பதை உறுதிப்படுத்துதல் அவசியம். வரியைச் செலுத்துவோர் அவை நன்மை பயக்கும் விதத்தில் செலவு செய்யப்படுகிறதா என்பதை உன்னிப்பாகக் கவனிக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் வரியிறுப்பாளர் சங்க அங்குரார்ப்பண கூட்டத்தில் சிறப்புரை ஆற்றிய சுன்னாகம் பங்குத்தந்தை அருட்திரு. ஏ. யோகராசா அடிகளார் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் கிராமோதய சபைத்தலைவர் திரு. இளையதம்பி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பங்குத்தந்தை மேலும் பேசுகையில் "மனித உடல்களை புதைக்கும் மயானத்தில் மாட்டு எலும்புகளும்- மண்டை ஓடுகளும் கிடக்கின்றன"

மனிதர்கள் இறந்த பின்பு மாடுகளாகின்றார்களா? என்ற மயக்கம் கூட பலருக்கு ஏற்படும் அளவுக்கு மிருகங்களின் எலும்புகளும் அங்கே காணப்படுகின்றன.

மாடுகள் இரவில் களவாக வெட்டப்படுவதாக புகார்கள் கிடைத்துள்ளன.

யாருடைய மாடுகள் இவ்வாறு களவாக வெட்டப்படுகின்றன என்பதையெல்லாம் கண்டுபிடிக்க வேண்டியதுடன் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும் இத்தகைய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்டோர் உடன் நடவடிக்கை எடுக்கத் தவறினால் வரியிறுப்பாளர் சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி அவர் கூறினார். (இ-27)

வணிக சஞ்சிகை

யாழ்ப்பாணம் செப்.27

யாழ்திருக்குடும்பக் கன்னியர் மட ஆங்கிலப் பாடசாலை "வணிகத் தளிர்" என்ற பெயரில் வணிகச் சஞ்சிகை ஒன்றை முதன்முதலாக வெளியிட இருக்கின்றது. (இ)

வடக்கு, கிழக்கு புனருத்தாரண நிதி:

மாகாண சபையிடம் நேரடியாக வழங்கக் கோருகிறது உலக வங்கி

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறது அரசு

யாழ்ப்பாணம், செப் 27

வடக்கு கிழக்கு மாகாணங்களின் புனருத்தாரண நடவடிக்கைகளுக்காக உலக வங்கியினால் வழங்கப்படவிருக்கும் நிதி வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாகாண சபைகளுக்கு நேரடியாக வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் சம்பந்தப்பட்ட நிதியின் மூலம் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் யாவும் வடக்கு கிழக்கு மாகாண சபைகள் மூலமாகவே மேற்கொள்ளப் படவேண்டும்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த உலகவங்கிக் குழு இலங்கை அரசாங்கத்துக்கு இவ்வாறு சிபார்சு செய்திருக்கிறது'

வடக்கு, கிழக்கு பகுதிகளில் புனருந்தாரண வேலைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியுதவிகளை வழங்குவதற்காக இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள உலக வங்கியின் குழு ஒன்று அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தது.

பிரஸ்தாப மாகாணங்களில் சம்பந்தப்பட்ட வேலைகளை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்த பிறகே உலகவங்கிக் குழு இலங்கை அரசுக்கு மேற்படி சிபார்சு செய்திருக்கிறது.

ஆனால் இலங்கை அரசு தரப்பில் இந்த சிபார்சுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் புனருத்தாரண வேலைகளுக்காக வழங்கப்படும் நிதி புனருத்தாரண அமைச்சின் ஊடாகவே வழங்கப்பட வேண்டுமென்று இலங்கை அரசு வலியுறுத்தியிருக்கிறது.

அத்துடன் ஒதுக்கப்பட்ட நிதிக்கான வேலைத் திட்டங்கள் யாவற்றையும் புனருத்தாரண அமைச்சே பொறுப்பு நின்று மேற் கொள்ள வேண்டும் எனவும் அரசாங்கத்தின் தரப்பில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

உயர், கல்வி அமைச்சுக்கு அண்மையில் 'நோராட்' ஸ்தாபனத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதி உரிய விதத்தில் பகிர்ந்தளிக்கப்படாத காரணத்தினாலேயே உலக வங்கி இப்படியான ஒரு சிபார்சை செய்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இதே வேளையில் வட பகுதியின் அகதிகள் திட்ட வேலைகளுக்காக ஐந்து லட்சம் கனேடிய டொலர்களை (ஒரு கோடியே இருபத்தி நான்கு லட்சம் ரூபா) வழங்க கனேடிய அரசாங்கம் அண்மையில் இணங்கம் தெரிவித்திருப்பதாக கனேடியத் தூதுவர் செல்வி கெரொலின் மக்கஸ்வி அறிவித்திருக்கிறார்.

இந்த நிதி ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய மூலம் வழங்கப்பட இருக்கிறது. (ஒ-ஐ)

ஊரடங்கு வேளையில்

கிளிநொச்சிப் பகுதியில் கொள்ளைகள் அதிகரிப்பு

வட்டக்கச்சி, செப். 27

கிளிநொச்சிப் பகுதியில் ஊரடங்கு வேளையில் துப்பாக்கி முனையில் கொள்ளைகள் அடிக்கடி நடைபெறுகின்றன.

கடந்த 15ஆம் திகதி இரவு 9மணி அளவில் கிளிநொச்சி 4ஆம் வாய்க்காலில் கந்தையா தங்கராசா என்பவரின் வீட்டில் 30 ஆயிரம்ரூபா பெறுமதியான நகைகளும் 11ஆயிரம் ரூபா ரொக்கமும் கொள்ளை அடிக்கப்பட்டன.

மற்றொரு சம்பவத்தில் வட்டக்கச்சி கால்நடைப்பண்ணையில் காவலாளியைக் கட்டிப் போட்டுவிட்டு அரசுக்குச் சொந்தமான நீர் இறைக்கும் இயந்திரம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17ஆம் திகதி கரைச்சி வடக்கு புளியம்பொக்கணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 4ஆயிரம் ரூபா பெறுமதியான பண்டசாலைப் பொருள்கள் திருடப்பட்டன.

மற்றும் கரடிப்போக்கு என்னுமிடத்தில் மு. கந்தையா என்பவர் வீட்டில் துப்பாக்கியுடன் புகுந்த கொள்ளையர்கள் அவரைக் கட்டிப் போட்டு அடித்துத் துன்புறுத்தி 15பவுண் தங்க நகைகளையும் 80, 929/- ரொக்கப் பணத்தையும் கொள்ளை அடித்துச் சென்றனர். (இ- ரி)

யாழ். திறந்த பல்கலைக் கழகத்தில்

தொழிலுரிமைத்துவத்திற்கும் சிறுவணிக முயற்சிக்குமான சான்றிதழ் பயிற்சி நெறி

திறந்த பல்கலைக்கழக மானிடவியல் சமூக விஞ்ஞானபீடம் யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் தொழிலுரிமைத்துவத்திற்கும் சிறுவணிக முயற்சிக்குமான சான்றிதழ் பயிற்சி நெறியை ஆரம்பிக்கவுள்ளது.

இப்பயிற்சிநெறி வணிகத்துறையினருக்கும், சுயஉழைப்பு வாய்ப்புக்களைத் தரும் சுதந்திர வணிக முயற்சிகளைத் தொடங்க விரும்புவோருக்கும் மிகப்பயனுடையதாகும்.

சிறுவணிக முயற்சிகளை நிறுவுதல், சிறுவணிக முயற்சிகளை முகாமை செய்தல், சந்தைப்படுத்தல், உற்பத்தி, கணக்கியலும் நிதியியலும் போன்ற கல்வித்துறைகளில் பரந்த அறிவை இப்பயிற்சி வழங்கும்.

இச்சான்றிதழ்ப் பயிற்சி நெறியில் சித்தியடைதவர்கள் பின்னர் முகாமையியல் உயர்மட்டப் பயிற்சி நெறிகளுக்கு அனுமதி பெறுவதற்கு வேண்டிய தகுதியும் தகைமையும் உடையவராகக் கருதப்படுவர்.

இச்சான்றிதழ்ப் பயிற்சி நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்படும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை பதிவாளர் திறந்த பல்கலைக்கழகம். என்னும் விலாசத்திற்கு ரூபா 25/-க்கான காசுக்கட்டளையைப் பிராந்திய நிலையத்தில் கையளித்துப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். திறந்த பல்கலைக் கழக உதவிப் பணிப்பாளர் திரு. என். மகாதேவன் அறிவித்துள்ளார். (ச-118)

குண்டுகளால் தாக்கப்பட்டு 4 பேர் கொலை

கொழும்பு, செப். 27

அம்பாந்தோட்டையில் 30 பேர் அடங்கிய இனந்தெரியாத நபர்கள் அடங்கிய குழு ஒன்று வீடு ஒன்றைக் குண்டுகளால் தாக்கி நான்கு பேரைக் கொலை செய்தது.

இச் சம்பவம் கடந்த வாரம் இரவு இடம் பெற்றது.

தாய், அவரின் ஒரு மகள், இரண்டு மகன்கள் ஓர் உறவினர் இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் ஆவர்.

இறந்தவர்களின் சடலங்களை அக் கோஷ்டி பின்னர் வாளால் வெட்டிய பின் எரித்தது.

வீட்டில்உள்ள உடைமைகளைச் சூறையாடிய பின்னர் வீடு தீக்கிரையாக்கப்பட்டது. (ஒ-எ)

"சேமிக்கப் பழகுக"

சுன்னாகம் செப். 27

சேமிப்புப் பழக்கம் சிறுவயதிலிருந்து ஆரம்பமாக வேண்டும்- வயது வந்ததின்பின் திட்டமிட்டு செயலாற்றுவதற்கு அது துணைபுரியும்-

கையில் கிடைக்கும் பணத்தைக் கண்டபடி செலவு செய்து துர்ப்பழக்கவழக்கங்களுக்கு ஆளாவதோடு நோய் துன்பங்களையும் தேடிக் கொள்ளும் மாணவர்களையும் நாம் காண்கின்றோம்.

இவ்வாறு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கா. குமாரசுவாமி ஏழாலை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சேமிப்புக் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போது குறிப்பிட்டார். (ச- 27)

கூடைப்பந்தாட்ட போட்டிகள் 28 ஆம் திகதி

யாழ்ப்பாணம் செப். 27

யாழ் பல்கலைக்கழகத்தினால் கடந்த 21 ஆம் திகதி நடத்தப்பட விருந்த ஆண் -பெண்கள் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளன.

இப் போட்டிகள் 28 ஆம் திகதி நாளை நடைபெறும். (இ)

அன்பினால் சாதிக்கக் கூடியவற்றை வாளினால் சாதிக்கக் கூடாது

இருதயக் கல்லூரி பவள விழாவில்

கல்விப் பணிப்பாளர் உரை

கரவெட்டி, செப் 27

அன்பின் மூலமும் அறத்தின் மூலமும் சாதிக்கக் கூடிய பல சிக்கலான பிரச்சினைகளை வாளின் மூலம் தீர்க்க முனைவது புத்திசாலித்தனமாகாது.

அன்புஎன்ற உணர்ச்சி மனித உள்ளங்களில் இருந்து தானாகவே எழுவது ஒன்றாகும். அது சந்தையில் வாங்கும் கடைச் சரக்கல்ல.

வதிரி திரு இருதயக் கல்லூரி பவள விழா முதல் நாள் நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. சி. வின்சென்ட் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. சபாநாயகம் தொடர்ந்து கூறியதாவது:-

முற்போக்கான நாடுகளில் பொதுச் சொத்துக்கள் மிக நேர்மையுடனும், கவனத்துடனும் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன.

கட்டடங்கள் உடைப்பது, நூலகங்களுக்குத் தீ வைப்பது போன்ற சமூக விரோத தேசாபிமானமற்ற நிகழ்வுகளை அங்கு காணமுடியாது.

இதே மனப்பான்மையை எமது மாணவர்களின் உள்ளத்தில் ஊட்டுவது பாடசாலைகளின் கடமையாகும்.

மேலும் எழுபத்திஐந்து ஆண்டுகளாக சமுதாயத்துக்குச் சிறந்த கல்விப் பணி புரிந்த இக் கல்லூரிக்கு பொதுமக்கள் என்ன பிரதி உபகாரம் செய்தார்கள் என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும்.

பொதுமக்கள் இக் கல்லூரிக்கு ஒரு சிறந்த நூலகத்தை உருவாக்கிக் கொடுப்பது வரவேற்கத்தக்கது என்றார். இக்கூட்டத்தில் வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி செல்வி திலகவதி பெரியதம்பி, கொத்தணி அதிபர் திரு. கே. சிவபாகசுந்தரம் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. அருட்திரு. கலாநிதி ஜே. ஏ கருணாகரர் அடிகளார் கரவெட்டி பங்குத் தந்தை அருட்திரு ஜெரோ செல்வநாயகம் அடிகளார் ஆகியோரும் உரையாற்றினர்.

வவுனியாவில்

உழுந்து, நெல் செய்கைக்கு கடனுதவி வழங்கத் திட்டம்

வவுனியா செப் 27

வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு உழுந்து நெல் செய்கைகளுக்குக் கடனுதவி வழங்குவதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு சிக்கன கடன்வழங்குகூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளர் திரு. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் உள்ள அறுபதுக்கும் மேற்பட்ட இளைஞர்சங்கங்களிடம் இருந்து இதற்கான [illegible] விண்ணப்பங்களும் திரட்டப்பட்டு வருகின்றன.

1988/ 89 ஆண்டு கால போக விவசாய முயற்சிக்கு சுமார் 39 லட்சம் ரூபா இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது [இ 164]

போட்டிகள்

சாவகச்சேரி, செப். 27

கல்வயல் அறவழிப் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் கல்வயல் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றன. (இ-31)

CITY & GUILDS - TELECOMMUNICATION
TECHNICIAN
(LONDON)
MAY / JUNE
1989 Examinations
Commencing on 1st Oct. 1988
உங்கள் பதிவுகட்கு :
North Ceylon Technical Institute
14, St. Peters Lane,
Hospital Road,
Jaffna.
(C/290)

N. C. E. ENGLISH CLASSES
For March - 1989
Commencing on 3 - 10 - 88
CONTACT :
North Ceylon Technical Institute
14, St. Peters Lane,
Hospital Road,
Jaffna.
(C/287)

பிரயாண ஒழுங்குகள்
SULTAN COMPANY
KUWAIT

1.	FITTER	50 KD
2.	PAINTER	40 KD
3.	MASON	40 KD
4.	PIPE FITTER	50 KD
5.	DRIVER H. V. (மத்திய கிழக்கு Driving Licence தேவை)	80 KD
6.	LABOURER EXAVATION	25 KD
7.	WELDER	60 KD

உணவு தங்குமிடம் இலவசம்.
நேர்முகப் பரீட்சை உண்டு.
கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்
குப்பிளான் வல்வெட்டி
(C/292)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

திருமதி கந்தையா பாக்கியம்

மலர்வு: 15- 4- 1905
உதிர்வு: 28- 8- 1988
திதி: 27- 9- 1988

27- 9 - 1988 செவ்வாய்க்கிழமை வீட்டுக் கிருத்தியம் நடைபெறும். அதில் யாவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம். அன்னாரின் மரணச் சடங்குகளில் பங்குபற்றியமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

வட்டுவினி
இணுவில் மேற்கு

(6812)

முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

திரு. வீரசிங்கம் ஜீவரட்ணம்

தோற்றம்: 21 - 3 - 1939
மறைவு: 9 - 10 - 1987
திதி: 27 - 09 - 1988

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய அன்புத் தந்தையே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களை விட்டு அகலா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்: கௌரி,
மோகன், சுரேகா.

கலைமணி லேன்,
கட்டப்பிராய்,
யாழ்ப்பாணம்.

(6729)

31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி பாக்கியம் சரவணமுத்து

தோற்றம்: 10- 09- 1905
மறைவு: 28- 08- 1988

உங்கள் ஆத்மா சாந்தியடைய மாவை முருகப்பெருமானை தினமும் வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பிருந்தாவனம்,
முள்ளானை,
இளவாலை.

(C/ 86)

பொய்யாமொழி

குறள்:

சிறுமையும் செல்லாத துணியும்
வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை.

பொருள்:

தன் அளவு சிறிதாகத் தேய்தலும், தலைவரிடம் நீங்காத வெறுப்பும், வறுமையும் இல்லாதிருக்குமானால் அத்தகைய படை வெற்றிபெறும்.

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 32078
27-09-1988 ம. பெ. இல. 23

நஷ்டம் யாருக்கு?

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை அவதானித்து, அவற்றை மனித உரிமை சம்பந்தப்பட்ட சர்வதேச ஸ்தாபனங்களுக்கு அறிவித்து, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஸ்தாபனங்களும் தனியாரும் பலதரப்புகளாலும் பயமுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இந்தப் பயமுறுத்தல்கள் குறித்து, ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஐ. நா. சபையின் ஓர் அங்கமான "சிறுபான்மை இன மக்களின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் மீது காட்டப்படும் பாகுபாடுகளைத் தடுக்கும் உப ஆணைக்குழு" மனித உரிமை அலுவல்களில் ஈடுபட்டு உழைப்போரைப் பயமுறுத்தியது குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கிறது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஈடுபட்டிருக்கும் தனிநபர்களுக்கும், மற்றும் ஸ்தாபனங்களுக்கும், இலங்கையில் உள்ள சகல தரப்பினரும், சுதந்திரமும், உரிமையும் வழங்கி அவர்களுக்கு உரிய மதிப்பளிக்க வேண்டும்.

இவ்வாறு ஐ. நா. வின் பிரஸ்தாப உப ஆணைக்குழு அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துவரும் தனிநபர்களும், ஸ்தாபனங்களும் பயமுறுத்தப்படுகின்றனர் என்பது கவலை தரும் விடயமாகும்.

அரசியல் உரிமைகளின் ஓர் அங்கம் தான் மனித உரிமைகள். அரசியல் உரிமைகளை விடவும் அடிப்படையானவை மனித உரிமைகள் என்று கூறினும் தகும்.

அரசியல் உரிமைகளுக்காகப் போராடுவோரின் மனித உரிமைகளைப் பறிப்பதற்கே, ஆட்சியில் உள்ள அடக்குமுறைக்காரர்கள் எப்போதும் முதலில் நடவடிக்கை எடுப்பதுண்டு,

வடக்கு - கிழக்கு வாழ் தமிழர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் அரசியல் உரிமைகளுக்காகப் போராடும் ஓர் இனம். ஆகையால் கடந்த பல வருடங்களுக்கு மேலாக அரசாங்கத் தரப்பினரால் மனித உரிமைகளும் பறிக்கப்பட்டவர்களாயினர்.

கைது செய்வதில், விசாரிப்பதில், தடுப்புக் காவலில் வைப்பதில் —

முகாம்களில், சிறைக்கூடங்களில் சித்திரவதை செய்யப்படுவதில் என்று —

பல வகைகளாலும் பல இடங்களிலும் தமிழர்களின் மனித உரிமைகள் பறிக்கப்பட்டன; மீறப்பட்டன.

இவற்றைச் சர்வதேச மட்டத்தில் எடுத்துச் சொல்ல, மனித உரிமை சம்பந்தப்பட்ட சர்வதேச நிறுவனங்களுக்கு ஆதாரத்துடன் தகவல் தெரிவிக்க தமிழ்ப் பகுதிகளில் மனித உரிமை இயக்கங்களும் ஸ்தாபனங்களும் தேவை.

அந்த நிறுவனங்களில் பணிபுரிபவர்களைக் கண்காணித்தும் பயமுறுத்தியும் தங்கள் அக்கிரமம் வெளியில் வராமல் பார்த்துக் கொள்ள அரச படைகள் முயலக் கூடும்.

அவர்களைவிடவும் வேறு தரப்பினரும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஈடுபடுவோரை பயமுறுத்துவதாக வெளிவந்திருக்கும் தகவல் மனவேதனை தருவதாகும்.

எங்கள் கண்களை நாமே குத்திக்கெடுப்பதா?

அரச படைகளாயினும் சரி, சிறை அதிகாரிகளாயினும் சரி, பொலீசாராயினும் சரி அவர்கள் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டும். மேலும் அவ்வாறு நடைபெறாமல் தடுக்கப்பட வேண்டும். சர்வதேச மன்னிப்புச் சபை, ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு, சிறுபான்மையினர் ஆணைக்குழு போன்ற சர்வதேச மட்ட அமைப்புகளின் கவனத்துக்கு மனித உரிமை மீறல் சம்பவங்களைக் கொண்டு வருதல் வேண்டும்.

அவ்வாறு செய்வதற்கு மனித உரிமை தொடர்பாகப் பணியாற்றுவோர் அச்சமின்றியும் சுதந்திரமாகவும் பணியாற்ற மக்கள் தரப்பில் இருந்து சகல ஒத்துழைப்பும் வழங்கப்பட வேண்டும்.

அப்படியில்லை என்று தனிப்பட்டவர் நலன் கருதி யாராவது சம்பந்தப்பட்டவர்களின் கடமையில் தலையிட்டால், நஷ்டம் தமிழ் மக்களுக்கே, அவர்களது உரிமைப் போராட்டத்துக்கே என்பதை உணர்வது நல்லது.

தி. மு.க-முஸ்லிம் லீக் உறவில் விரிசல்;

தமிழக அரசியலில் புதிய திருப்பம்

சென்னை, செப். 26

ஏழு எதிர்க் கட்சிகள் அமைத்துள்ள தேசிய முன்னணியில் திராவிட முன்னேற்றக்கழகம் விலகிக்கொள்ளவில்லையானால் அதனுடனான கூட்டை முறித்துக் கொள்ளப்போவதாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அறிவித்திருக்கிறது.

முஸ்லிம்லீக்கின் தமிழ் நாட்டுப்பிரிவுத் தலைவர் அப்துல் ஸமது இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

முஸ்லிம் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அப்துல் ஸமத், தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் அரியானா முதலமைச்சர் தேவிலாலின் மொழிக்கொள்கை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றும் தெரிவித்தார்.

தேசிய முன்னணியில் வி. பி. சிங்கின் ஜன் மோர்ச்சா, ஆந்திர முதலமைச்சர் ராமராவின் தெலுங்கு தேசம் அஜித் சிங் தலைமையிலான ஜனதா அஸாம் முதலமைச்சர் பிரபுல்லா மஹந்தா தலைமையிலான அஸாம் கண பரிஷத், கருணாநிதி தலைமையிலான தி.மு.க. உட்பட ஏழு கட்சிகள் இணைந்துள்ளன. (எ)

துருக்கி நாட்டுக்கு மேற்கு ஜேர்மன் உதவி

பொன், செப் 26

துருக்கிக்கான உதவியை மேற்கு ஜேர்மன் அதிகரித்து உள்ளது.

ஈராக்கின் தாக்குதலுக்கு அஞ்சி தஞ்சமடைந்துள்ள குர்டிஷ் அகதிகளுக்கு உதவவே இந்த உதவி என்று பொன்னில் வெளியுறவு அமைச்சு தெரிவித்தது (எ)

ஜானகி அம்மாள்தான் அடுத்த முதல் அமைச்சர்

ஆர். எம். வீரப்பன் கூறுகிறார்

சென்னை, செப் 26

'தமிழக சட்டசபைத் தேர்தலில், ஜானகி அம்மாள் தலைமையில் உள்ள அ. தி. மு. க வுக்கும், தி. மு. கழகத்திற்கும் தான் உண்மையான போட்டி அதில் வெற்றி பெற்று, அடுத்த முதல் அமைச்சர் ஆகப்போவது ஜானகி அம்மாள் தான்' என்று முன்னாள் அமைச்சர் ஆர் எம். வீரப்பன் கூறினார்.

பம்பாய் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு ஆர். எம் வீரப்பன் பேட்டி அளித்தார்.

பேட்டி விவரம் வருமாறு:-

வெற்றி வாய்ப்பு

கேள்வி: தேர்தலில் உங்கள் கட்சி வெற்றி பெற வாய்ப்பு உண்டா?

பதில்: தொண்டர்களில் 80 சதவிகிதத்தினர் எங்களுடன் இருக்கிறார்கள். புரட்சித் தலைவருக்கு வாக்கு அளித்த மக்கள் அப்படியே அன்னை ஜானகியை ஆதரிக்கிறார்கள் ஜெயலலிதாவை பார்ப்பதற்கு

கூட்டம்வரலாம் ஆனால். அதற்காக வாக்கு கிடைத்துவிடும் என்று சொல்ல முடியாது

இரகசிய உறவு

கேள்வி: உங்கள் கட்சிக்கும், தி. மு. வுக்கும் இரகசிய உறவு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே?

பதில்: அப்படிப்பட்ட உறவு ஏதும் இல்லை நாங்கள் அன்னை ஜானகி அம்மாள் தலைமையை ஏற்று இருப்பவர்கள் மீண்டும் புரட்சித் தலைவர் ஆட்சி அமைப்போம் என்று கூறுகிறோம்.

கருணாநிதி ஆட்சிக்கு வருவதற்கு முயலகிறார். எங்களுக்கு பொது எதிரியாக இருப்பவர் ஜெயலலிதா. ஆகவே, நாங்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

புரட்சித் தலைவரின் ஆட்சி கவிழ்க்கப்படாமல் காப்பாற்றுவதற்காக ஜனாதிபதி ஆட்சி வராமல தடுக்க தி. மு. க. ஆதரவை நாடியது உண்டு

சட்டசபையில் ஒரு மசோதா ஓட்டுக்கு வரும் போது எதிர்க் கட்சி உதவியை ஆளும் கட்சி நாடுவதில்லையா?

இதில் தவறு ஏது?

பலம் - பலவீனம்

கேள்வி: உங்கள் பலம், பலவீனம் எது?

பதில்: எங்களுக்கு பலவீனம் என்று ஏதும் இல்லை ஜெயலலிதாவின் துரோகம் எங்களுக்கு பலவீனமாகத் தெரியலாம். எங்களுடைய முக்கிய நோக்கம், அந்த துரோகப் பெண்ணைப் பற்றி மக்களிடம் எடுத்துச் சொல்வது தான்

எங்களைப் பொறுத்தவரை கட்சி ரீதியாகவும் கொள்கை ரீதியாகவும் மிகவும் பலமாக இருக்கிறோம். சிவாஜி கணேசனின் ஆதரவு மேலும் எங்களுக்குப்பலத்தைக் கொடுக்கிறது. (எ-4)

லெபனான் அரசியல் நெருக்கடி நீடிக்கிறது

பேருட், செப். 26

லெபனானில் நிலவி வரும் அரசியல் நெருக்கடி நீடிப்பதாக அறிவிக்கப் பட்டது

கிறிஸ்தவ ஜனாதிபதியான ஜெமாயல கடந்த வெள்ளிக்கிழமை தனது பதவிக்கால முடிவில் இராஜினாமாச் செய்தார்.

அவருக்குப் பதில் புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்ய லெபனான் நாடாளுமன்றம் தவறிவிட்டது.

அதைத் தொடர்ந்தே இந்த நெருக்கடி ஆரம்பித்தது.

பதவி விலகிய திரு ஜெமாயல் கிறிஸ்தவ இராணுவத்தளபதி ஒருவரின் தலைமையில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தார்.

இதற்கு எதிராக சிரிய ஆதரவில் முஸ்லிம் இடைக்கால நிர்வாகம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

லெபனானில், கிறிஸ்தவ, முஸ்லிம் மக்கள் சம அளவில் வாழ்ந்து வருகின்றனர். (எ)

ஜெயலலிதாவுடன் கருத்து வேறுபாடு இல்லை

சாத்தூர் இராமச்சந்திரன் தகவல்

சென்னை செப் 26

"ஜெயலலிதாவிற்கும் எனக்கும் எந்த நேரத்திலும் கருத்து வேறுபாடு ஏற்படவில்லை. அ. தி. மு. க. விலிருந்து விலகப் போவதில்லை,' என்று அ. தி. மு. க. (ஜெ) கொள்கை பரப்புச்செயலாளர் சாத்தூர் ராமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜெயலலிதாவிற்கும் சாத்தூர் ராமச்சந்திரனுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகவும் அதனால் சாத்தூர் ராமச்சந்திரன் கோபித்துக் கொண்டு வெளியேறியதாகவும் கூறப்பட்டது.

மேலும் மதுரையில் சாத்தூர் ராமச்சந்திரன் தன்னுடைய ஆதரவாளர்கள் கூட்டத்தைக் கூட்டி அ. தி. மு. க. (ஜெ) விலிருந்து விலக இருப்பதாகவும் கூறப்பட்டது. இதற்கு பதில் எதுவும் தராமல் மௌனமாக இருந்தார் சாத்தூர் இராமச்சந்திரன்

அண்மையில திடீரென அவர் அ. தி. மு. க அலுவலகம் வந்தார்.

ஜெயலலிதாவிற்கும் எனக்கும் எந்த நேரத்திலும் கருத்து வேறுபாடு ஏற்படவில்லை.

மதுரையில் மாவட்ட செயலாளர்களை அழைத்து இரகசிய கூட்டமும் நடத்தவில்லை. மாவட்டங்களில் புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டதற்காக என்னைப்பாராட்ட வந்திருந்தனர். அந்த சந்திப்பைத்தான் ரகசிய கூட்டம் என்று குறிப்பிடுகிறார்கள்.

பொதுவாக தலைமை என்று குறிப்பிடும் அந்த பதவியில் இருப்பவர்கள் எங்களுடைய செயல்பாடுகளை விமர்சிக்கவும் கண்டிக்கவும் உரிமை உண்டு. அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே கட்சியை விட்டு வெளியேற வேண்டிய அவசியம் இல்லை. அத்தகைய சூழ்நிலையும் அ. தி. மு. க. (ஜெ) வில் இல்லை. அ. தி. மு. க. வை விட்டு வெளியேற மாட்டோம். தமிழகத்தில் மீண்டும் எம் ஜி ஆர். ஆட்சியை ஏற்படுத்துவதுதான் எங்களுடைய பணி அதை மனப்பூர்வமாக செய்து முடிப்போம்

இவ்வாறு சாத்தூர் ராமச்சந்திரன் கூறினார் (எ-4)

ஜனாதிபதி தேர்தலில் யாரை இ. தொ. கா. ஆதரிக்கும்?

கொழும்பு செப் 27

ஜனாதிபதி தேர்தலில் இ தொ. கா. யாரை ஆதரிக்கும்?

இதுபற்றி இன்னமும் இ. தொ. கா முடிவு செய்யவில்லை என அதன் பொதுச் செயலளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னரே இ. தொ. கா செயற்குழு தீர்மானிக்கும்.

தற்போது இ. தொ. கா. யு என் பியை ஆதரித்து வருகிறது இதன் அர்த்தம் என்றும் எச்சந்தர்ப்பத்திலும் யு. என். பியையே இ. தொ கா ஆதரிக்கும் என்று கொள்ளக் கூடாது.

சிறுபான்மையினர் விசேஷமாக இந்திய தமிழ்ச் சமூகத்தின் நலன்கள் யாரால் பாதுகாக்கப்படும் என்பதை வைத்தே யாரை ஜனாதிபதித் தேர்தலில ஆதரிப்பது என்பதை இ தொ. கா. முடிவு செய்யும்.

சுதந்திரக் கட்சியுடன் உத்தியோகரீதியில் பேச்சுக்கள் நடத்தப்படவில்லை. ஆனால் சிலரைச் சந்தித்து இ. தொ. கா பேசி வருகிறது. இப்படி திரு. எம எஸ் செல்லச்சாமி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் திரு. தொண்டமானுக்கு உள்ள நெருங்கிய தனிப்பட்ட உறவும் தற்போது இ. தொ. கா, யு. என். பியை ஆதரிப்பதற்கு ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. (இ-எ)

ஐக்கிய சோஷலிச அணியின்

ஒரு பிரிவினர் பொது வேட்பாளர் நியமனத்துக்கு ஆதரவு

கொழும்பு செப் 27

ஜனாதிபதித் தேர்தலில பொது வேட்பாளர் ஒருவரை நியமிக்கவேண்டும என்ற யோசனைக்கு ஐக்கிய சோஷலிச அணியில் ஒரு பிரிவினர் ஆதரவளித்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.

ஏழு கட்சிகளின் கூட்டணி பொது வேட்பாளராக சுதந்திரக்கட்சி திருமதி பண்டாரநாயக்காவை நியமிக்க வேண்டும் என்று தீர்மானித்துள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை மக்கள் கட்சி, நவசமசமாஜக்கட்சி ஆகியன உள்ள ஐக்கிய சோஷலிச அணியின் சார்பில் மூன்றாவது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த வேண்டும் என்று ஒரு பிரிவினர் மும்முரமாக ஆதரவு திரட்டும் அதேவேளை இன்னொரு பிரிவினர் திருமதி பண்டாரநாயக்காவை ஆதரிக்கவேண்டும் என்று குரல் எழுப்பியிருக்கின்றனராம்.

இது சரிவராவிட்டால், அணியை விட்டே வெளியேறிவிடப் போவதாக அந்தப் பிரிவினர் பயமுறுத்தியுள்ளனர் என்றும் கொழும்புச் செய்தி [illegible] (இ-எ)

சட்டத்தரணிகள் சங்கத்துக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு

பொலீஸ் திணைக்களம் தாக்கல் செய்யுமாம்

கொழும்பு செப். 27

சட்டத்தரணிகள் சங்கத்துக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றை உயர் நீதிமன்றத்தில் பொலீஸ் திணைக்களம் தாக்கல் செய்ய விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வழக்கைத் தாக்கல் செய்யும்படி சட்டமா அதிபரைக் கோரும்படி பொலீஸ் மா அதிபர் எர்னஸ்ட் பெரேரா பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகலேக்கு கடிதம் எழுதியிருக்கிறார் என்று அறியவருகிறது.

இதற்குச் சட்டமா அதிபர் மறுக்கும் பட்சத்தில் பொலீஸ் தரப்பில் அவ்வழக்கைத் தாக்கல் செய்ய அனுமதி தரும்படியும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரிடம் பொலீஸ் மா அதிபர் அனுமதி கோரியிருக்கிறார்.

இதனிடையில் மனித உரிமைகள் இயக்குநர் திரு டி பி குமாரசிங்காவுக்கு பொலீஸார் முறையிட்டிருக்கின்றனர்.

பொலீஸாருக்காக ஆஜராகக் கூடாது என்று சட்டத் தரணிகள் சங்கம் தனது உறுப்பினர்களைக் கோரியிருப்பது பொலீஸாருக்கு உள்ள மனித உரிமைகளை மீறு [illegible] அந்த முறைப்பாட்டில் பொலீஸார் தெரிவித்துள்ளனர்

இது சம்பந்தமாக சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் பொலீஸார் முறையிட்டுள்ளனர்

சட்டத்தரணி விஜேதாஸ லியனாராச்சி பொலீஸ் காவலில் இருந்த போது காயங்களுக்காளாகி உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து, சட்டத் தரணிகள் எவரும் பொலீஸாருக்காகத் தனிப்பட்ட ரீதியிலோ அல்லது உத்தியோக ரீதியாகவோ நீதிமன்றங்களில் ஆஜராகக் கூடாது என்று சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்தது தெரிந்ததே.

அதை எதிர்த்தே பொலீஸார் இப்போர்க்கோலம் பூண்டனர்.

கோயிலில் திருட்டு

யாழ்ப்பாணம், செப் 27

கே. கே. எஸ் வீதியில் மில்க்வைற் தொழிலகத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள அரசடிப் பிள்ளையார் கோயிலில் கடந்த 23 ஆம் திகதி இரவு திருட்டு இடம் பெற்றது.

பிள்ளையாரின் வெள்ளி அங்கியையும் இயந்திரத் தகட்டையும் திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். (இ- 10)

அக்: 5 இல் திரை நீக்கம்

வடமராட்சி, செப் 27

வல்வையில் நிறுவப்பட்டுவரும் போராளிகளின் நினைவு ஸ்தூபி அக்டோபர்மாதம் 5 ஆம் திகதி திரை நீக்கம் செய்யப்படவுள்ளது. (ச- 160)

உப ஜனாதிபதி ஒருவர் நாட்டுக்குத் தேவையா?

கொழும்பு, செப 27

உப ஜனாதிபதி ஒருவர் நாட்டுக்குத் தேவையா?

சுதந்திரக் கட்சி எம். பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி சொன்னதாவது:

சகல அதிகாரங்களும் ஜனாதிபதியிடம் இருக்கும் போது உப ஜனாதிபதிக்கு என்ன வேலை இருக்கப் போகிறது?

இலாகா இல்லாத உப ஜனாதிபதியாகத்தான் இருப்பார்.'

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப்:

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் வெறும் சம்பிரதாய ஜனாதிபதி பதவியை வைத்துக் கொள்ளலாம்.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் அ. அமிர்தலிங்கம்:

இக்கேள்வியில் எமக்கு அக்கறையே கிடையாது.

எமது பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். இதுவே எம் தலையாய பிரச்சினை. எம் பகுதிகளில் அமைதி திரும்ப வேண்டும் பூரண அதிகாரப் பரவலாக்கல் இடம் பெற வேண்டும்.

ஜனநாயக வாழ்வுக்கு நாம் திரும்ப வேண்டும் இந்த நிலையில் நாட்டுக்கு உப ஜனாதிபதி தேவையா என்பது நமக்குத் தேவையற்ற விஷயம்.

இதை விட முக்கியமான பிரச்சினைகள் நமக்கு உண்டு.

இ ஜே எல். பி. கட்சித் தலைவர் திரு. ஏ. வி. குணரத்ன,

ஜனாதிபதியே நாட்டுக்குத் தேவை இல்லை என்று நாம் கூறி வருகிறோம். பின்னர் ஏன் உப ஜனாதிபதி பற்றிச் சிந்திக்க வேண்டும்?

நாம் பதவிக்கு வரின் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து விடுவோம். (இ-எ)

கிளிநொச்சியில் புதிதாக உள்ளூராட்சி அலுவலகம்

கிளிநொச்சி, செப். 27

கிளிநொச்சி மாவட்டத்துக்கான உள்ளூராட்சித் திணைக்களத்தின் அலுவலகம் இவ்வாரம் முதல் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் உதவி ஆணையாளராக திரு எஸ் ரி. மார்க்கண்டு நியமிக்கப் பட்டுள்ளார்.

கிளிநொச்சி தனி மாவட்டமாகியும் கடந்த பல ஆண்டுகளாக கிளிநொச்சி மாவட்டத்திற்கென இதுவரை தனியொரு அலுவலகம் ஆரம்பிக்கப்படாதிருந்தது

ஆனால் தற்போது புதிய அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டதும் பட்டினசபை, கிராமசபை ஆகியவற்றின் நிர்வாகத்தின் கீழ் இருந்த கடைகள் விரைவாக நீக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்புதிய அலுவலகம் இதுவரை கிளிநொச்சிக் கச்சேரி அபிவிருத்தித் திட்டமிடற் பணிமனை இயங்கிவந்த கட்டடத்தில் செயற்படும். இதனால் அபிவிருத்தித் திட்டமிடல் பணிமனை அரசாங்க அதிபரின் அலுவலக வளவிலுள்ள கட்டடம் ஒன்றில் இயங்க ஆரம்பித்துள்ளது. (ஒ-76)

விசேட ஆங்கில வகுப்புகள்
✶ SPECIAL ENGLISH CLASSES
✶ N.C.E. SRI LANKA / LONDON
வாரத்தில் 3 நாட்கள்
மாணவியருக்கு விடுதி வசதியுண்டு.
Further Education Programme
Uduvil Girls' College

உதயன்

27 - 09 - 1988 செவ்வாய்க்கிழமை

விசேட ஆங்கில வகுப்புகள்
★ பேச, எழுத, வாசிக்க, விளங்க
✶ பாடசாலை விலகியவர்களுக்கு
✶ உயர் கல்வி விரும்புவோருக்கு
Further Education Programme
Uduvil Girls' College

திலீபன் நினைவு நாள்

காரைநகர்ப் பகுதி மக்களும்

நேற்று ஊர்வலம்

காரைநகர் செப் 27 தியாகி திலீபனின் நினைவுநாட்களின் இறுதி நாளான நேற்று காரைநகரிலும் மாபெரும் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

பல பொது அமைப்புக்கள், சங்கங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், வர்த்தகர் சங்கம், பிரஜைகள்குழுக்கள் ஆகியவற்றின் ஏற்பாட்டின் பேரில் இந்த ஊர்வலம் நடைபெற்றது.

வாரிவளவு பிள்ளையார் கோயில் முன்றலில் ஆரம்பித்த ஊர்வலம் மேற்கு வீதியாகச் சென்று இந்திய அமைதிப்படை முகாமில் மகஜர் ஒன்றையும் கையளித்தது.

ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்த ஊர்வலம் மீண்டும் களபூமி, தோப்புக்காடு, பலகாடு ஊடாகச் சென்று வாரிவளவை அடைந்தது.

★ திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை நிறுத்து.

★ தமிழர் பிரதேசத்தை ஆக்கிரமிக்காதே.

★ பூஸா கைதிகளை விடுதலை செய் போன்ற சுலோகங்கள் தாங்கிய அட்டைகளும் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன.

ஊர்வலம் முடிவில் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

இப் பொதுக் கூட்டத்தை பிரசைகள் குழுத் தலைவர் திரு. எஸ் தேவதயாளன் ஆரம்பித்து வைத்தார்.

இக் கூட்டத்தில் பிரசைகள் குழுச் செயலாளர் வித்துவான் மு. சபாரத்தினம் திரு. எஸ். சின்னமணி, உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர். (ஒ-10-73)

தேவை

1. பாதுகாப்பு உத்தியோகத்தர்

பாதுகாப்பு உத்தியோகத்தர் உடனடியாகத் தேவை. 35 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவர்களும், அனுபவம் உடையவர்களும் விரும்பத்தக்கது. எதிர்வரும் 29-9-88 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் நேரில் வரவும். சொந்தக் கையெழுத்தில் எழுதிய விண்ணப்பத்தோடு. உறவினர் அல்லாத இருவரிடம் பெறப்பட்ட சான்றிதழ்களுடன் வரவும். சம்பளம் பேசி முடிவெடுக்கப்படும்

2. பயிலுநர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

பயிலுநர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. 18-25 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஜீ.சி.ஈ. (சாதாரணதர) பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக இருத்தல் அவசியம். விளையாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நற்சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பங்களை 5-10-88க்கு முன் அனுப்பிவைக்கவும்

3. அலுவலகப் பியோன்

அலுவலகப் பியோன் ஒருவர் உடன் தேவை. பூந்தோட்ட வேலைகள் செய்வதில் அனுபவம் உள்ளவராக இருத்தல் அவசியம். நற்சான்றுகளுடன் நேரில் வரவும்.

நியூ உதயன் பப்பிளிகேஷன்ஸ்
(பிரைவெட்) லிமிடெட்,
292/2. நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

விக்னு டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்.
(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L வினா-விடை
[பிரிவு —7]

ஆரம்பம் : 28-9-1988

DAY CLASSES - 8-30 - 1-30
EVENING CLASSES - 2-45 - 4-45

முக்கிய குறிப்பு :
I. எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.
II. பயிற்சிப் பரீட்சைகள் இலவசமாக நடாத்தப்படும்.
III. குறிப்பிட்ட மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும்.
IV. பாடக் குறிப்புக்கள் இலவசமாக வழங்கப்படும்.
(C/266)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 27- 09- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd292/2 Navalar Road, Jaffna on Tuesday 27th September 1988

கிராம,....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 23, 24, 26, 27, 28 ஆம் திகதிகளில் மேற்படி நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்களும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன.

ஆனால் 23, 24, 26 ஆம் திகதிகள் தியாகி திலீபன் நினைவஞ்சலி வாரத்திற்குள் அடங்கியதால், செயலகம் திறக்கப்படாமையால் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவில்லை

எனினும் இன்று முதல் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் என பரவலாகப் பேசப்பட்டதைத் தொடர்ந்து தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபர் திரு. கோபாலரத்தினத்திடம் வினவிய போது–

இம்மாதம் நேர்முகப் பரீட்சை எதுவும் நடைபெறாது எனவும் இது சம்பந்தமாக மேலதிக விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஒ-க-10)

வடபகுதியில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடைகளும் முற்று முழுதாக மூடப்பட்டிருந்தன.

அரச - தனியார் பஸ் சேவைகள் எதுவும்நடைபெறவில்லை. ஆட்டோக்கள் வாடகைக்கார்கள் கூட நேற்று சேவையில் ஈடுபடவில்லை.

யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் நோயாளர் வருகை மிகக் குறைவாகவே காணப்பட்டது.

நகரில் முக்கிய சந்திகள் எங்கும் திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மாலைகள் சூட்டப்பட்டு குத்துவிளக்குகளும் ஏற்றப்பட்டிருந்தன.

வீதிகள் தோறும் வாழை மரங்களும் கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. (ஒ-க-10)

லட்சியத்தை......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலட்சியக்கனவை வெளிப்படுத்தினான். ஆனால் இன்றோ திலீபன் மரணித்து ஒரு வருடம் சென்றபின்பும் அவனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல், அவற்றுக்குப் புறம்பான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்றார்.

வண பிதா. பயஸ் உரை நிகழ்த்துகையில் தெரிவித்ததாவது-

மக்கள்மக்களாக வாழவேண்டும். மனிதன் மனிதனாக வாழவேண்டும். மனிதன் அடிமையாக, விலங்காக வாழக்கூடாது. எனது இனம் விடிவு பெறவேண்டும். எனது இனம் விடுதலை பெறவேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்துக்காக பெரிய புதிய அஹிம்சை முறையிலே தனது உயிரைத் தியாகம் செய்தவர் தியாகி திலீபன். திலீபனின் ஓராண்டு நினைவில் கிறீஸ்தவ சமூகமும் இணைந்து கொள்கின்றது என்று கூறினார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றுகையில்சொன்னதாவது:

ஞானிகளும், வீரர்களும் இறப்பதில்லை. அவர்கள் இறந்த பின்பும் மக்கள் மனங்களில் வாழ்கின்றார்கள். இந்த வரிசையில் என்றும் எமது மக்கள் மனங்களில் வாழும் உயர்ந்த நிலையைப் பெற்றிருக்கின்றான் திலீபன்.

வரும் காலத்தில் திலீபன் பெயரால் ஓர் அணையாவிளக்கு ஏற்படவேண்டும். அது என்றும் பிரகாசித்துக் கொண்டே இருக்கவேண்டும் - என்றார்.

அன்னையர் முன்னணி சார்பில் செல்வி புஸ்பா செல்வநாயகம், மாணவர் பிரதிநிதிகள், திலீபனின் தந்தையார் திரு இராசையா ஆகியோரும் உரையாற்றினர் கவிதாஞ்சலிகளும் இடம் பெற்றன.

மாணவர் ஒருங்கிணைப்புக்குழுவினரால் வெளியிடப்பட்ட ''தியாகசீலம்'' என்ற நூலின் முதல் பிரதி திலீபனின் தந்தையிடம் கையளிக்கப்பட்டது.

பிரசைகள் குழுவினரின் சார்பில் திரு. பொ. தங்கராசா நன்றியுரை நிகழ்த்தினார்.

கூட்ட முடிவில் அன்னதானம் வழங்கப்பட்டது. (ஒ-க-10-5)

திலீபனுக்காக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களிடம் இருந்து இரத்தம் பெறப்படவில்லை.

நேற்று நடந்த இந்த நிகழ்ச்சியில் 31 பேரிடமிருந்து 29 பைந்து இரத்தம் பெறப்பட்டது.

இந்த இரத்தம் யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரிகளால் பெறப்பட்டது. (ஒ-9)

பேனாவுக்குப்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மன் ஆலய முன்றலில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகியது. ஊர்வலத்தில் புலிக்கொடிகள் தாங்கிய வண்ணமும் திலீபனின் படத்தைத் தாங்கிய வண்ணமும் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

பின்னர் நெடியகாட்டுப் பிள்ளையார்கோவிலை வந்தடைந்த ஊர்வலத்தினர் அங்கு பிற்பகல் 3 மணிவரை உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

தொடர்ந்து 3மணிக்கு பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது.

கூட்டத்தில் மாணவர் ஒருங்கிணைப்புக் குழுவின் உடுப்பிட்டிப் பொறுப்பாளர் திரு. ச. ரவி உரையாற்றுகையில் கூறியதாவது;-

எமது இழந்த உரிமைகளை மீட்டெடுப்பதற்காக நடைபெறும் இந்த போராட்டம் ஆயுதப் போராட்டமாக மட்டும் இருக்கக்கூடாது, மாணவர் சக்தி மகத்தான சக்தி என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டும் அஹிம்சைப் போராட்டமாகவும் அது இருக்க வேண்டும் என்றார்.

வல்வெட்டித்துறை பிரசைகள் குழுத் தலைவர் திரு. செ. செல்வேந்திரா உரையாற்றுகையில் ''நடக்கப்போகும் தேர்தல் எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தேர்தல் ஆயின் நாம் ஆதரவு வழங்கலாம். ஆனால் எவ்வித அதிகாரமும் அற்ற ஒரு சபைக்காக நடைபெறும் தேர்தலாக இருக்கும்போது அதை நாம் எவ்வாறு ஏற்றுக் கொள்வது'' என்று கேட்டார்.

பிரசைகள் குழுச் செயலாளர் திரு. த. அனந்தராஜா தமது உரையில் சொன்னதாவது:-

எமது பாரம்பரிய பிரதேசத்தை வேறு சக்திகளுக்கு விட்டுக் கொடுக்க நாம் தயாராக இல்லை. இழந்த உரிமைகளை மீட்டெடுக்கும் இந்தப் போராட்டத்தில் எங்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு இக் காலகட்டத்தில் மிக அவசியமானதாகும்-என்றார்.

தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவர் திரு க. சிவானந்தசுந்தரம் கூறியதாவது :-

அதிகாரமற்ற மாகாணசபை அமைப்பை ஏற்று தேர்தலில் பங்கு பற்றவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியும் - ஏனைய அமைப்புக்களும் கோருவது துரோகத்தனமாகும். இதனை எதிர்த்து சகல அமைப்புகளும் கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி மகஜர்களை அனுப்ப வேண்டும்

அதேவேளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தமட்டில் தமிழருக்கு மூன்று நிலைப்பாடுகள் உண்டு.

● ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரித்தல்,

● தமிழ் ஈழத்துக்கான ஒரு கருத்துக் கணிப்பாக அந்தப் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளுதல்.

● ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பின்கீழ் எமக்கு ஆதரவு தர முன்வரும் சிங்களக் கட்சிக்கு ஆதரவு வழங்குதல்.

ஆகியனவே அந்த மூன்று நிலைப்பாடுகளுமாகும். எனினும் மாகாணசபைத் தேர்தல் என்ற கறைபடிந்த கையை இந்தியா எதிர்வரும் 3ஆம் திகதியுடன் ஏற்றுக்கொள்ளப் போகிறது அதுவரைதான் இந்தியாவுடன் எமது பேச்சுக்கள் இருக்கும் என்றார். (அ-9-160)

யுத்த...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தம் செய்கிறோமெனத் தாமே அறிவித்துவிட்டு எமது இயக்க உறுப்பினரைச் சுட்ட இந்திய இராணுவத்தின் இச் செயல் இந்தியாவின் உள்நோக்கத்தை, எம்மைமுற்று முழுதாக அழிக்க செயற்படுவதை தெளிவாக நிரூபிக்கிறது.

இந்திய அரசின் இந்தக் கபட நாடகத்தை, தர்மத்துக்கும் நீதிக்கும் புறம்பான சர்வதேச யுத்த நிறுத்த விதிகளையும் மீறிய செயலை, தமிழ் மக்களும் [illegible] [illegible] கொள்ள வேண்டும். (அ)

வெள்ளத்துக்கு 275 பேர் பலி

புதுடில்லி, செப் 27
பஞ்சாப், இமாசலப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் கடும் மழை காரணமாக ஏற்பட்ட பெருவெள்ளத்தில் இது வரை 275 பேர் உயிரிழந்தனர்.

புதுடில்லியில் யமுனா நதியில் அபாய கட்டத்தைத் தாண்டி வெள்ளம் ஓடுவதாகவும் அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

றெட்பானா உதவி

முல்லைத்தீவு செப். 27
முல்லைத்தீவு மாவட்ட றெட்பானா ஸ்தாபனம் குமுளமுனை- தண்ணீர் முறிப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த 1000 குடும்பங்களுக்கு அரிசி, மா, சீனி, பால்மா ஆகியவற்றை வழங்கியது (ச- 32

யாழ்...,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் நிறுவனங்கள் சிலவும் மூடப்பட்டிருந்தன. பல கடைகளில் ஒற்றைக் கதவு திறக்கப்பட்டே வியாபாரம் நடைபெறறு வந்தது.

இதன் உச்சக்கட்டமாக நேற்று யாழ் நகர் பூரணமாக அடங்கியது.

எனினும் இன்று நிலைமை வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-க)

திருமதி திலகவதி செல்லத்துரை

திருமதி திலகவதி காலமானார். இவர் காலம் சென்ற பிரதம புகையிரதப் பாதுகாவலர் (Head Guard C. G. R.) செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலம்சென்ற ஆறுமுகம், இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், பத்மினியின் அருமைத்தாயாரும், மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியர் இ. ஸ்ரீதரனின் அன்பு மாமியாரும், மைதிலி, சாருஜனின் அம்மம்மாவும், சாந்தமலரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 26. 09. 88 திங்கட்கிழமை நடந்தேறியது.

தகவல்;
இ. இ. ஸ்ரீதரன்.
(ஆசிரியர்)

[illegible]
வட்டுக்கோட்டை.
(C/89)

மரண அறிவித்தல்கள்

வைத்திய சிரோன்மணி

எமில் இன்னாசித்தம்பி

வைத்திய சிரோன்மணி எமில் இன்னாசித் தம்பி அவர்கள் 22- 9- 88 அன்று காலமானார்கள். அன்னாரின் பூதவுடல் 1- 10- 88 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து இன்னாசித்தம்பி ஞாபக சிற்றாலயத்திற்கு நல்லடக்க ஆராதனைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:
சுகந்தன் இன்னாசித்தம்பி

இன்னாசித்தம்பி வளவு,
சில்லாலை. (6623)

திரு. முத்துத்தம்பி ஐயாத்துரை

(இளைப்பாறிய சுகாதார திணைக்கள உத்தியோகஸ்தர்)

சாவகச்சேரி பொலீஸ் நிலைய ஒழுங்கையைச் சேர்ந்த முத்துத்தம்பி ஐயாத்துரை (இளைப்பாறிய சுகாதார திணைக்கள உத்தியோகஸ்தர்) அவர்கள் காலமானார். அன்னார் பொன்னம்மாவின் அன்புக்கணவரும், தேவமனோகரி, மனோரஞ்சிதம் (பிரான்ஸ்) செல்வரட்ணம் (A.P.C. மீசாலை), சாரதாதேவி, குகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், புலேந்திரகுமார், பாலசிங்கம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் 28. 9. 88 புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறும்.

தகவல். **புலேந்திரகுமார்.**
பொலீஸ் நிலைய ஒழுங்கை,
சாவகச்சேரி. (6828)

Mr. George Simon Rasiah

The Remains of George Selvarajah Simon Rasiah, the beloved husband of Leela, brother of John (Canada), late Alice, Robert, Edward and Jeyam, uncle of Harishan Sethukavalar (Hatton National Bank, Colombo) will be removed for interment at St. Mary's Burial Grounds Kopay on Wednesday 28-9-88 at 2-00 p m

Mrs. Simon Rasiah

85, Point Pedro Road,
Kopay. (6832)

திரு. A. R. சுப்பிரமணியம்

(இளைப்பாறிய அதிபர், மாத்தளை இந்து மகாவித்தியாலயம், கொட்டாஞ்சேனை மத்திய கல்லூரி)

திரு. A. R. சுப்பிரமணியம் காலமானார். அன்னார் தாவை சண்முகநாதர் அம்பலவாணர் நாவலரின் பேரனும், அம்பலவாணர் இராஜலிங்கம் - அன்னபூரணம் அவர்களின் அன்பு மகனும், நாகபூஷணியின் அன்புக் கணவரும் சுகேஷினி (Staff, Holy Family Convent, Bambalapitiya), பிரியதர்ஷினி, மிர்ணாளினி, நில்மினி (அண்ணாமலை பல்கலைக் கழகம்), கார்த்திகாயினி (பேராதனை பல்கலைக் கழகம்), திருமாலினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), சரவணபவானந்த சங்கராச்சாரிய ராஜ்மன்னா (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பொ. ஞானசுந்தரராஜா (Post-Office, Colpetty), இ. பிரேமச்சந்திரன் (Jt. Managing Director, Weld - Tech Engineering (PTE.) Ltd, Colombo) ஆகியோரின் மாமனாரும், பிரியங்கா, அர்ஜுனா ஆகியோரின் அருமைப் பேரனும் வவுனியா தம்பிப்பிள்ளை ஸ்ரோர்ஸ் உரிமையாளர் சி. சின்னத்தம்பி - கனகம்மா அவர்களின் மருமகனும், திருமதி க. அன்னய்யாவின் பெருமகனும், A.R. நடராஜா சொர்ணம்மா, ஞானம்மா, குணபூபதி, A. R. சண்முகலிங்கம் (புகையிரத நிலையம் யாழ்ப்பாணம்), சிவலோகநாதன் (C T.B. மனேஜர்), பரமேஸ்வரி, சிறீஸ்கந்தராசா (ஆசிரியர் சிலாபம்), மோகனராணி, கோவர்த்தனராஜா (சிலாபம்) ஆகியோரின் சகோதரரும், K. S தாமோதரம்பிள்ளை (உரிமையாளர், முருகன் அரிசி ஆலை, சாவகச்சேரி), சி. நாகராஜா (சட்டத்தரணி), நாகேந்திரம், நாகலிங்கம் (U.K.), நாகேஸ்வரன் (தம்பிப்பிள்ளை ஸ்ரோர்ஸ், வவுனியா), நாகபாலன் (U.K.), நாகநாதன், நாகேஸ்வரி, ஞானேந்திரன், நாகதேவி, சத்தியவான், நாகலட்சுமி, சிவராமலிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 28-9-88 புதன்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

107, பலாலி வீதி,
கந்தர்மடம்.
[6831]

தகவல்;
சி. நாகராஜா